உ
கடவுள் துணை.

# செந்தமிழ்

தொகுதி-கசு.] காலயுக்தி-ஞு ஆவணிமீ [பகுதி - ம.
Vol. XVI. August,—September. 1918. No. 10.

## நிகண்டு கற்றல்.

நிகண்டாவது இச்சொற்கு இதுவே பொருளென்று சொற்கும் பொருட்குமுள்ள ஆற்றலாகிய நியமம் அறிவிக்கும் நூல். ஆற்றலாகியநியமமில்லையாயின்; இதற்கிது பொருளென்னும் நியமவுணர்ச்சி தடுமாறும். தடுமாறவே சங்கரன்=விட்டுணு. நாராயணன்=சிவன். எனப் பொருள்கூறலும் பொருந்துவனவாகும். நிகண்டு வடமொழி, தென்மொழி என்னும் இரு மொழிகளிலும் பலவாகப் பலராலும் இயற்றப்பட்டிருக்கின்றது. வடமொழிநிகண்டுகள் அமரகோசம், விசுவகோசம், அமரதத்தம், யாதவப்பிரகாசம் முதலியன. தென்மொழிநிகண்டுகள் திவாகரம், பிங்கலம், சூடாமணி, உரிச்சொல் முதலியன.

வடமொழிநிகண்டுகளிலேவருஞ்சொற்கள் தென்மொழிநிகண்டுகளிலும், மற்றைத் தென்மொழிநூல்களிலும் விரவிவருகின்றன. வடசொற்கள் பரந்துவாராதநிகண்டுநூல்கள் யாவை? சங்கச்சான்றோர் நூல்களிலே வடசொற்கள் வரவில்லை என்று சிலர் வாதிப்பர். அவர் சங்கச்சான்றோர் நூல்களை நன்கு நோக்கக்கடவர். நோக்குங்கால் ஆங்காங்குப் புலப்படும். சங்கச்சான்றோர் நூல்களினும் பிற்றைச் சான்றோர் நூல்களிலே வடசொற்கள்மிகப் பரந்துவருகின்றன என்பாராயின்; அவர்கூற்று ஒக்கும். இப்பொழுதைநூலாளர்களும் தத்தம் நூல்களிலே வடசொற்களை இடையிடை பிரயோகிப்பர். வடசொற்க

வெறுப்பாருமுளர். முன்னோராற்பிரயோகிக்கப்பட்டு இயற்பாலவழங்கிவந்த வடசொற்களையும், வேண்டுழிப்பிரயோகிக் வடசொற்களையும் வெறுத்தல் நன்றன்று. ஆத்திசூடி, கொன்றைவேந்தன்முதலியவற்றிலேவருஞ் சக்கரம், சித்திரம், தானம், மூர்க்கர், ஆலயம், சந்ததி, விடகாரி முதலியன வடசொற்களல்லவா? தொல்காப்பியத்திலேவரும் ஆனந்தம், அங்கதம், அம்போதரங்கம் முதலியன வடசொற்களல்லவா? அவைகளை வெறுப்பவர் யாவர்! தென்மொழி நூல்களிலே வடசொற்களும்விரவிவரும்வழக்கம் அன்றுதொட்டுவந்த வழக்கமேயாம்.

தென்மொழிநூல்களுள்ளே நிகண்டுச்சொற்கள் வாராதநூல்கள் யாவை? நிகண்டுச்சொற்கள் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வாக்குண்டாம் முதலிய நீதிநூல்களிலும் வருகின்றன. நாலடியார், திருக்குறள் முதலிய நீதிநூல்களிலும் வருகின்றன. நன்னூல், தொல்காப்பியம் முதலிய இலக்கணநூல்களிலும் வருகின்றன. பாரதம், இராமாயணம் முதலிய இலக்கியநூல்களிலும் வருகின்றன. கந்தபுராணம், சேதுபுராணம் முதலிய புராணங்களிலும் வருகின்றன. மற்றைநூல்களிலும் வருகின்றன.

ஆத்திசூடி முதலியவற்றில்வருவன அஃகம், ஐயம், பீரம், சொக்கு, வையம், கருமம் முதலியன. நாலடியார்முதலியவற்றில் வருவன பகடு, அகடு, அடகு, துப்பு, கைதூவாமை, உப்பு முதலியன. நன்னூல் முதலியவற்றிலே வருவன எகின், முரண், இடக்கர், பொச்சாப்பு முதலியன. பாரதம் முதலியவற்றில் வருவன பெருக்காளர், வேட்கோ, அந்தப்புரம், காகதுண்டம், குப்புறல் முதலியன. கந்தபுராணம் முதலியவைகளிலே வருவன சிகரம், கபித்தம், துருவை கண்டூதி முதலியன. சேதுபுராணத்திலேவருந் திரிசொற்களுக்கு அளவில்லை. அவை பின்னல், இலஞ்சி, குகு முதலியன.

இவைகளெல்லாம் நிகண்டுநூலுணர்ச்சிகொண்டே அறிதற்பாலன. முற்காலத்திலே நூல்களைக்கற்பவர்யாவரும் இலக்கணம் முதலியவற்றோடு நிகண்டுநூல்களையும் நியமமாகக்கற்றுவந்தார்கள். அக்காரணத்தினாலே கற்கும் நூலுரைகளின் சொற்பொருள்களை எளிதில் அறிந்தார்கள். நூலுரைகளைப் பிழையற வாசித்தார்கள். வேண்டுஞ் சொற்களைத் தெரிந்துபிரயோகித்து நூலுரைகளைச் செய்தார்கள்.

# நிகண்டு கற்றல்

இக்காலத்திலே தமிழ்நூல்களைக்கற்பவரைக் காண்டலரிது. சிலநூல்களின் சிலபாகங்களைக்கற்றாலும் நிகண்டு, இலக்கணம் முதற் கருவிநூல்களைக் கற்பதில்லை. கருவிநூலுணர்ச்சியின்மையாலே நூல்களினுள்ளே செல்ல இயலாது. புறத்தேநின்று காலநிரூபணமும், வாதமும் பிறவுஞ்செய்வர். அவருள்ளே ஆங்கிலேயப்பயிற்சியிலே மிக விருப்புடையோர் சிலர் நிகண்டுகற்றல் நிர்மூடத்தனம்; அகராதி ஒன்றே அமையும் என்பர். இவர்கூறும் புதுவழி பல நிகண்டுகளை ஆக்கிவைத்துச்சென்ற முன்னோர்க்கும், அவைகளைக்கற்றுவந்த பின்னோர்க்குந்தெரியாதா? கற்போரெல்லாந் தனித்தனி அகராதி வைத்திருத்தலும், கவிதோறும் வருஞ்சொற்களை அகராதியினோக்கலும், நூலுரைசெய்யுங்கால் வேண்டுஞ்சொற்களுக்கு அகராதிதேடலும் இயைவதெப்படி? அகராதி நோக்கினும் நிகண்டுகற்றோர்நெஞ்சம்போல நினைவுந்துணிவும் அமையுமா? நிகண்டினும் அகராதிபடித்தல் நன்று என்றாருமுளர். அகராதிபடிப்பவருமுளரா? இக்காலத்திற் பலர், நிகண்டுகளிலும், பிறநூல்களிலும் வேண்டிய சொற்களிருக்கவும் அவைகளை அறியாத முட்டுப்பாட்டினாலே திசைச்சொற்களையும், சேரிச்சொற்களையும், வழுச்சொற்களையும், வேறுபொருட்சொற்களையும், அவசியமற்ற வடசொற்களையும் விரும்பியவாறெல்லாந் தத்தம் புத்தகப்பத்திரங்களிற் பிரயோகிக்கின்றனர்.

திசைச்சொற்களாவன; சர்க்கார், சுமார், இந்துமதம், இந்துநூல், கோரிக்கை, மரத்துப்போதல் முதலியன. சேரிச்சொற்களாவன: புருஷன் பெண்சாதி, ஆணுவாத்தி, பெண்ணுவாத்தி, ஆண்கல்வி, பெண்கல்வி, சுடுதண்ணீர், குமாரு, வேலு, அவர்கள் முதலியன. வழுச்சொற்களாவன: கிரகஸ்தன், பார்ப்பினி, சஞ்சிகை, பூமாதேவி முதலியன. வேறுபொருட்சொற்களாவன: அக்கிராசனம்வகித்தல் உபநியாசம், சொற்பாவித்தல், ஆண்டநூல் முதலியன.

நிகண்டுச்சொற்கள் பொருள்களைமாத்திரந்தான் அறிவிக்குமா? பொருள்களின் உருவம், செயல், உடைமை, பால், உற்பத்திமுதலிய பலவற்றையும் அறிவிக்கும். காரி, வெள்ளை, கடனிறவண்ணன் முதலியன உருவத்தை அறிவிக்கின்றன. அரன், அரி, வாசந்தி, மாதவி முதலியன செயலை அறிவிக்கின்றன. வேலன், கடம்பன், முதலியன உடை

மை அறிவிக்கின்றன. ஆடவன், ஆடவள் முதலியன பாலை அறிவிக்கின்றன. பங்கயம், மலயசம் முதலியன உற்பத்தியை அறிவிக்கின்றன.

இவ்வியல்புடைய நிகண்டுநூல்கள் கற்பிக்கப்படல் வேண்டுமா? வேண்டாமா? வேண்டுமாயின்; கல்லாதவாறு என்னையோ? வேண்டாமாயின்; சொற்பொருளுணர்ச்சி எப்படிச்சித்திக்கும்! தமிழ்ப் பரிபாலனஞ்செய்யுஞ்சபையாரும், தமிழ் கற்பிப்போர்கற்பவர்களும் தமதுகருத்தை அறிவித்தல் நன்று.

இங்ஙனம்,

அ. குமாரசுவாமிப்பிள்ளை,

சுன்னாகம்.

---

உ

# காளிதாஸர் காலநிர்ணயம்.

செந்தமிழ்ச்செல்வரே?

முன்னுரை.—காளிதாஸர் காலநிர்ணயத்திற்கும் அதன் உடன் சம்பந்தப்பட்ட விஷயங்களுக்கும் பொருத்தமான ஆதாரங்களையெல்லாம் தொகுத்தெழுத இதுகாறும் ஒருவரும் முன்வராததால், இவ்வியாஸத்தில் அவ்வாறு செய்யத்துணிந்தேன். இவ்வாராய்ச்சியைப் பூர்ணமாக்க நினைத்தே இதுவிஷயமான நூல்களையெல்லாம் தாராளமாய் உபயோகித்திருக்கிறேன். இங்ஙனம் கையாளப்பட்ட நூல்கள் அளவற்றவைஆதலால், அவைகளையெல்லாம் மறவாது எண்டெடுத்துக் கூறுதற்கு இயலாது. ஆகையால், சரிபார்ப்பதற்கு அவசியமான இடங்களில்மட்டுமே அவைகளைப்பெயராற்குறித்து இதற்குமுன் இவ்வாராய்ச்சியில் உழைத்திருக்கும் புலவர்களுக்கெல்லாம் பொதுவாக என் நன்றியை மிகுந்த களிப்புடன் செலுத்துகின்றேன். ஆயினும், இவ்வியாஸத்திற்காணப்படும் முடிபுகளெல்லாம் எனக்கே உரியவை. சில இடங்களில் என் சிறிய ஆராய்ச்சியில் கிடைத்த

பொருளையும் சேர்த்திருக்கிறேன். ஆதாரங்கள் காட்டப்பெறாதமொழிகளையெல்லாம் இவ்வியாஸத்திலேயே வேறு இடங்களில் நிரூபித்திருக்கிறேன்.

எல்லைகள். பாரதயுத்தத்திலிருந்து 3735 - ஆம் ஆண்டும், சகவரசரின் 556-ஆம் ஆண்டுமான கி. பி. 634 - இல் பொறிக்கப்பட்ட சளுக்கவேந்தன் இரண்டாவது புலகேசியின் ஐஹோல் லிகிதத்தில் (Epigraphia Indica VI. p. 7.) காளிதாஸர் புகழ்பெற்ற புலவராகக்கூறப்படுதலின், அவர் கி. பி. 600 - க்கு முன்னிருந்தவராதல் வேண்டும். ஆனால், காளிதாஸர் இயற்றிய 'மாளவிகாக்நிமித்ரம்'என்ற நாடகத்தில் "மகன் அக்நிமித்ரனை அணைந்து புஷ்யமித்ரன்" என்றிருப்பதால் (V) அக்நிமித்ரன் புஷ்யமித்ரனது மகனென்றும், "நமது மகனை மிகவும் கொடியவேலையில் ஸேநாபதி அமர்த்தினானன்றோ" என்றிருப்பதால் (V) அக்நிமித்ரனது மகன் வஸுமித்ரன் ஆவனென்றும், புஷ்யமித்ரன் ஸேநாபதி எனவும், பெயர்பெற்றிருந்தனரென்றும், "மௌரியஸசிவன்" அதாவது மௌரியவரசனது அமைச்சன் பகைவனென அக்நிமித்ரனால் அழைக்கப்படுவதால் (I-7) மௌரியவரசருக்குப்பின் புஷ்யமித்ரன் பட்டமெய்தினனென்றும், தெரியவருகிறது. புராணங்களிலும், கடைசி மௌரியவரசனான ப்ருஹத்ரதனைக்கொன்று அவன் ஸேநாபதி புஷ்யமித்ரன் ஆண்டானென்றும், அப்புஷ்யமித்ரனது மகன் அக்நிமித்ரனென்றும், அவ்வக்நிமித்ரனது மகன் வஸுமித்ரனென்றும், காணப்படுதலால் (Pargiter: Dynasties of the Kali age. p. 70.), காளிதாஸர் கூறும் அக்நிமித்ரனும், புராணங்களில் காணப்படும் அக்நிமித்ரனும் ஒருவனேயாம். இவ்வக்நிமித்ரன் கி. மு. 150-இல் பட்டமெய்தியதால் (Smith: Early History of India. p. 203), காளிதாஸர் கி. மு. 150-க்குப்பின்னரே இருந்தவராதல்வேண்டும். ஆகவே, காளிதாஸர்காலம் கி. மு. 150-க்கும், கி. பி. 600-க்கும் இடைப்பட்டகாலமெனப்பெறப்பட்டது.

அக்நிமித்ரவாதம். கி. பி. 1411 - இல் இருந்த காடயவேமர் (Epi. Ind. IV. pp. 321-ப) 'மாளவிகாக்நிமித்ர'த்திற்கு அவரியற்றியவுரையில், ஒவ்வொரு நாடகத்திலும் 'பரதவாக்கியம்' என்ற முடிபுரை முக்காலங்களுக்கும் பொதுவாக இருக்கவேண்டுமென்றும், இவ்

விதிக்கு மாருக 'மாளவிகாக்நிமித்ர'த்துப் பரதவாக்கியத்தில் காளி தாஸர் அக்நிமித்ரன்பேரைக்குறித்திருப்பதால் காளிதாஸர் அக்நிமித் ரன்காலத்திலிருந்தவராதல்வேண்டுமென்றும் எழுதிப்போந்தனர். அங் ஙனமாயின், தமது 'முத்ராராக்ஷஸத்துப் பரதவாக்கியத்தில் விசாக தத்தர் (கி.பி. 550-600) சந்த்ரகுப்தன் பெயரைக்குறித்திருப்பதால், விசாகதத்தரும் சந்த்ரகுப்தமௌரியன் (கி. மு. 321-297), முதலா வது சந்த்ரகுப்தன் (கி.பி. 319-330), அல்லது இரண்டாவது சந்த்ர குப்தன் (கி. பி. 375-413) காலத்திலிருந்தவராகவேண்டுமே. ஆனல் ஹூணரை நாகரிகமற்ற 'இந்திய' ஜாதியராக அவர் குறிப்பதாலும் (V-11), கி. பி. 528 - இல் யசோதர்மனுல் அபஜயம்பெற்றபிறகே ஹூணர் அவ்விதம் ஆயினராதலாலும், விசாகதத்தர் கி.பி. 528க்கு முன் இருந்தவராகார். ஆகையால், காடயவேமர்கூறும்வாதம் வலி யற்றதெனவும், காளிதாஸர் அக்நிமித்ரன்காலத்தில் இருந்தவராக வேண்டுவதில்லையெனவும் தெளியலாகும். மேலும், 'மௌரியஸசிவன்' என்ற பதத்திற்கு மௌரியவரசனது அமைச்சன் என்னுது மௌரிய னென்றபெயரால் விளங்கிய அமைச்சன் என்று காடயவேமர் உரை யெழுதுவதிலிருந்தே, அவர் கூறுவனவெல்லாம் பிரமாணமாகாவென விளங்கும்.

நவரத்னவாதம். 'ரகுவம்சம்' முதலான மூன்று காவ்யங்களையும் 'ச்ருதிகர்மவாத' நூலொன்றையுமியற்றிய காளிதாஸரால் கலிவர்ஷம் 3068 என்ற கி. மு. 34-இல் விக்ரமாதித்ய'னது அவையில் இயற் றப்பெற்றதெனக்கூறிக்கொள்ளும் "ஜ்யோதிர்விதாபரண" மென்ற ஜ்யோதிஷநூலொன்று அவ்வவையில் தந்வந்தரி, க்ஷபணகர், அமர ஸிம்ஹர், சங்கு, வேதாளபட்டர், கடகர்பர், காளிதாஸர், புகழ்பெற்ற வராஹமிஹிரர், வரருசி என்ற நவரத்னங்கள் வீற்றிருந்தனரெனக் கூறுகின்றது. முதலில் பாவரத்னரென்பவரால் கி. பி. 1711 - இல் தான் இந்நூல் முதன்முதல் உரையெழுதப்பெற்றது. காளிதாஸரால் எழுதப்பெற்றதெனக்கூறிக்கொள்ளும் இந்நூலைக்குறித்தாவது, காளி தாஸர் இயற்றியதாக அதுகூறும் 'ச்ருதிகர்மவாத' நூலைக்குறித்தா வது பிரஸ்தாபம் வடமொழிநூல்களில் எங்கும் காணப்படவில்லை. காளிதாஸரது சிறப்புற்ற நாடகங்கள் யாவுமே 'ரகுவம்சத்திற்குமுன் இயற்றப்பெற்றிருந்தபோதிலும், அவைகளிலொன்றேனும் இந்நூலில்

குறிக்கப்படாததும் கவனிக்கத்தக்கது. மேலும், கலியுகத்தில் உதித்த ஆறு சககாரகரில், அதாவது சகங்களை வழங்கச்செய்தவர்களில் சாலி வாஹநனையும் ஒருவனாக இந்நூல் கூறுகின்றது. (X110). ஆதிகாலங் களில் தங்களுடைய சகங்களில் அதாவது காலகணனங்களில் ஒன் றையாவது ஒருமனிதனுடைய தனிப்பெயரால் இந்தியர்கள் வழங்கி வந்ததாகத்தெரியவில்லை. கி. பி. 78 முதல் வழங்கப்பட்டுவரும் கால கணனம் பலநூற்றாண்டுகளாக 'சகவரசரதுகணனம்' அல்லது 'சாகம்' என்றே பெயர்பெற்றிருந்தது. கி. பி. 1354-இல் பொறிக்கப்பட்ட முதலாம் புக்கராயனது ஹரிஹர்சாஸனத்தில்தான் இக் காலகண னம் 'சாலிவாஹநன்' என்றபெயருடன் முதன்முதல் சேர்ந்து காணப் படுகிறது. (Journal of the Royal Asiatic Society. 1966. pp. 809-820). ஆகையால், இஜ்யோதிஷநூல் கி. பி. 1350-க்குப் பின் னரே இயற்றப்பெற்றிருக்கவேண்டும். இது எங்ஙனமாயினும், கி. மு. 34-க்குமுன் தமது நூல்களையெல்லாம் இயற்றினதாகக்கூறும் இவ் வாசிரியர் 33+78=111 வர்ஷங்களுக்குப்பின்னரே ஏற்பட்ட ஒரு சகத்தை எவ்வாறு குறித்தனர்? அன்றியும், கி. பி. 450-ல் இயற் றப்பெற்ற ஜ்யோதிஷ 'ஸித்தாந்த'ங்களிலும், ஸிகிதங்களுள் கி. பி. 634-இல் பொறிக்கப்பட்ட ஐஹோல் ஸிகிதத்திலும்தான் கலிவர்ஷம் முதன்முதல் கூறப்படுகிறது. ஆயினும், கி. மு. 34 - இலேயே கலி வர்ஷத்தைத் தாம் உபயோகிப்பதாக இவ்வாசிரியர் கூறுகிறார். ஆகை யால் இந்நூலைக் காளிதாஸர் இயற்றிலர் எனக்கருதல் தகும். கி. மு. 6-ஆம் நூற்றாண்டில் இருந்ததாக Dr. Hoernle கூறும் ஸுச்ருதர் தமது குருவெனக்குறிப்பிடும் தந்வந்தரியும், கி. பி. 300-ல் இருந்த அமரரும், சாகம் 509 என்ற கி. பி. 587-இல் இறந்த வராஹமி ஹிரரும், (Anaraja's commentary on Brahmagupta's Khanda-Khadya). காளிதாஸரும் கி. மு. 34-இல் விக்ரமாதித்யனது அவை யில் ஒருங்கு வீற்றிருந்ததாக இந்நூல் கூறுவது வியக்கத்தக்கதே. இவ்விக்ரமாதித்யனே கி. மு. 58-இல் இருந்து வழங்கப்பட்டுவரும் காலகணனத்தை ஸ்தாபித்தவனாகக் கருதப்படுகிறான். ஆனால், கி.மு. 58-இல் மாளவதேசத்தில் விக்ரமாதித்யனென்ற அரசன் ஒருவனும் இருந்திலன் என்று நினைப்பதற்கு இடமுண்டு. இக்காலகணனம் முதல் நான்குநூற்றாண்டுகளாகப் பெயரொன்றுமின்றியே வழங்கப்

பட்டுவந்தது. பின்னர், கி. பி. 343-இலும், 371 - இலும் "க்ருத" என்று பெயர்பெற்றிருந்தது. (Gangdhar inscription of Visyavarman; and, Bijaygadh inscription of Vishnuvardhana. Gupta Inscription. pp 75, 253). பிறகு கி. பி. 404 - இலும், 424-இலும், "க்ருத" என்றும், 'மாளவகணங்களால் வழங்கப்பட்டு வரும் சகம்' என்றும் இருபெயர் பெற்றிருந்தது. (Third Mandasor inscription; Nagari inscription). அதற்கும்பின்னர், மேற்கூறப்பட்ட இரண்டாவது பெயரால்மாத்திரமே இச்சகம் விளிக்கப்பெற்றது (G.T.pp 87, 158). முதன்முதல் இச்சகம்'விக்ரம்' என்ற பெயரால் அழைக்கப்பட்டது. கி. பி. 842-இல் பொறிக்கப்பட்ட ஒரு டோல்பூர் லிகிதத்தில்தான் (Indian Antiquary XX. p. 406, No. 10). ஆயினும், கி. பி. 971-இல் பொறிக்கப்பட்ட ஏக்லிங்ஜிலிகிதத்தில்தான் இச்சகம் விக்ரமாதித்யன் என்ற 'அரச'னுக்கு உரிமை கூறப்பட்டது. (Journal of the Bombay branch of the Royal Asiatic Society. XXII. p. 166). இலக்கியங்களில் அவ்வாறு முதன்முதல் உரிமைகூறப்பட்டது அமிதகதி கி. பி. 993-இல் இயற்றிய 'ஸுபாஷிதரத்னஸந்தோஹ'த்தில்தான் Ind. Ant. XX. p. 406. No. 40). ஆகவே, இலக்கிய சாஸன ஆதாரங்களிரண்டும் இச்சகத்தை விக்ரமாதித்யன் ஸ்தாபித்தான் என்ற வாதத்திற்கு மாறாகவே இருக்கின்றன. கி. பி. 1070-இல் ஸோமதேவர் இயற்றிய 'கதாஸரித்ஸாகரத்தில் விக்ரமாதித்யன் உஜ்ஜயினியில் ஆண்டவனென்றும், மஹேந்த்ராதித்யன் மகனவன் என்றும், மிலேச்சரை நாசஞ்செய்தவனென்றும் காணப்படுதலாலும், ஸ்கந்தகுப்தனுக்கு (கி. பி. 455-470) விக்ரமாதித்யனென்றும், அவனது தந்தை குமாரகுப்தனுக்கு மஹேந்த்ராதித்யனென்றும் சிறப்புப்பெயர்கள் இருந்தனவாதலாலும், குமாரகுப்தனது ஜீவிதகாலத்தில் (கி. பி. 413-455) அவனது பிரதிநிதியாக ஸ்கந்தகுப்தன் உஜ்ஜயனியில் ஆண்டவனாதலாலும், ஸ்கந்தகுப்தனும் ஹூணரென்ற மிலேச்சரை நாசம் செய்தவனாதலாலும், ஸ்கந்தகுப்தனும் விக்ரமாதித்யனும் ஒருவனேயாமெனக்கருதல் தவறாகாது. குப்தரென்பவர் வலிமிகுந்த கொடுங்கோன்மன்னராய் இருந்தனரென்றும் அவர் வம்சம் அழிவுற்றபொழுது, அச் சுபநிகழ்ச்சியைக்குறிப்பதற்கே கி. பி. 319-இல் ஒரு சகம் ஸ்தாபிக்கப்பட்டதென்றும்

அல்பிரூனி (கி. பி. 1030) கூறுகின்றார். (India. Sachau. Trans. II. p. 7.) ஆனால், இதற்கு மாறாக, குப்தர்சகம் அவர்களது அழிவைக் குறியாது முதலாவதுசந்த்ரகுப்தனது ராஜ்யாபிஷேககாலத்தையே குறிக்கின்றதென்றும், குப்தவரசர் கொடுங்கோன்மன்னரென்றது முற்றிலும் பிழையேயாமென்றும், அவர்களது பேருதவிகொண்டே இலக்கியங்களும், கலைகளும், சமயங்களும் செழித்தோங்கினவென்றும், நாம் நன்கறிவோம். ஆகையால், பிற்காலத்தரசரான குப்தர்களைப் பற்றிய வரலாறுகளே கி. பி. 11 - ஆம் நூற்றாண்டில் அழிவுற்றன வென்று தெளிவாகின்றது. ஹூணர்களை ஸ்கந்தகுப்தன் வென்ற செய்தியொன்றே ஜனங்களது அவ்யக்தஞாபகத்தில் எஞ்சிநின்றது. இதுகாரணமாகவே மாளவசகம் விக்ரமாதித்யனதுபெயருடன் சேர்க்கப்பெற்றிருக்கவேண்டும். புராணங்களில் காணப்படும் கலியுக ராஜ விருத்தாந்தத்தில் ஓரிடத்திலேனும் விக்ரமாதித்யனது பிரஸ்தாபமேயில்லாததற்குக் காரணமும் விக்ரமாதித்யன் ஒரு குப்தவரசனாகயிருந்ததே. ஏனெனில், அவ்விருத்தாந்தம் குப்தர்கள் ஆண்டுகொண்டிருக்கும்பொழுதே இயற்றப்பெற்றதால், அவர்களது பூர்ணமான வரலாறுகளை எழுதுவதற்கு முடியாமல் அவர்களைப்பெயரால்மாத்திரம் குறித்துவிட்டு நிற்கின்றது. கி. மு. முதனூற்றாண்டின் பிற்பகுதியில் மாளவதேசத்தில் ஆண்ட அரசன் நஹபானன் என்ற பார்த்தியனுவனென்று கீழ்வரும் தக்க காரணங்களால் ராகல்தாஸ் பானர்ஜி அவர்கள் நிரூபித்திருக்கிறார். (J. R. A. S. 1917. pp. 273-89). நாஸிக்கிலும் கார்லேயிலும் கிடைத்த நஹபானன்மருகன் உசவதாதனது லிகிதங்களின்காலம் 41, 42, 45, என்றும், ஜுன்னாரில் கிடைத்த நஹபானன் மந்த்ரி அயாமனது லிகிதத்தின்காலம் 46 என்றும் காணப்படுகின்றன. ஆயினும், இவ்வாண்டுகள் இன்ன சகத்திலென்று குறிக்கப்படவில்லை. சகன் ருத்ரதாமனது ஆண்டௌலிகிதம் சாகம் 52 என்ற கி. பி. 130 - இல் பொறிக்கப்பட்டது.

நஹபானனது ஜுன்னார் சாஸனமும் இதே சகத்தின் 46-ஆம் ஆண்டில் பொறிக்கப்பட்டதென்று கருதுவோமாயின், இவ்விரண்டுசாஸனங்கட்குமிடைப்பட்ட 52-46 = 6-வர்ஷங்களில் நாம் பின்னர்க்கூறும் நிகழ்ச்சிகளெல்லாம் ஸம்பவித்திருக்கவேண்டும். க்ஷஹராதவம்சத்தைத் தன்தந்தை கோதமீபுத்ரசாதகர்ணி உன்மூலனம் செய்தானென்று ஸ்ரீ

வாசிஷ்டபுத்ரபுளுமாயியின் 19-ஆம் ஆண்டில் பொறிக்கப்பட்ட நாஸிக் லிகிதத்தில் (Epi. Ind. VIII. p 60) கூறப்படுதலானும், மற்றொரு நாஸிக் லிகிதத்தில் (Epi. Ind. VIII. p. 82) க்ஷஹராத க்ஷத்ரப னென்ற சிறப்புப்பெயரால் நஹபானன் கூறப்படுதலானும், நஹபானனது வம்சத்தையே கோதமீபுத்ரன் உந்மூலனம் செய்தானென்று தெளிவாகின்றது. ஆகராவந்தி என்ற மாளவம்; கச்ச, ஸௌராஷ்ட்ரம் என்ற கத்தியவார், அநூபம் முதலான மாகாணங்களை க்ஷஹராதரிடமிருந்து கோதமீபுத்ரனும், ஆந்த்ரரிடமிருந்து சகன் ருத்ரதாமனும் முறையே வென்றனரென்று ஸ்ரீ வாசிஷ்டபுத்ரபுளுமாயியின் 19-ஆம் ஆண்டில் பொறிக்கப்பட்ட நாஸிக்லிகிதத்திலிருந்தும், ருத்ரதாமனது கிர்நார் லிகிதத்திலிருந்தும் நாம் அறிகிறோம் (Epi. Ind. VIII. pp. 60,64.) தனது பிரதாபத்தினாலேயே இவைகளையெல்லாம் பெற்றதாக ருத்ரன் கூறுவதாலும், ஆண்டௌ கச்சநாட்டிலிருப்பதாலும், இம் மாகாணங்களையெல்லாம் ஆண்டௌலிகிதம்பொறிக்கப்பட்ட கி. பி. 130-க்கு முன்னரே ருத்ரன் ஆந்த்ரரிடமிருந்து வென்றிருக்கவேண்டும். மேலும், கோதமீபுத்ரனது 18, 24-ஆம் ஆண்டுகளிலும், அவன்மகன் வாசிஷ்ட புத்ரனது 2, 6, 19, 22-ஆம் ஆண்டுகளிலும் பொறிக்கப்பட்ட சாஸனங்கள் நாஸிக்கில் காணப்படுவதால் (Epi. Ind. VIII. pp. 60, 73; J. B. B. R. A. S. X. pp. 122-3. No. 1122-4), கோதமீபுத்ரனது 18-ஆம் ஆண்டிலிருந்து அவன் மகனது 22-ஆம் ஆண்டுவரை, 28-வர்ஷங்களாவது நாஸிக் அவர்களதாட்சிக்கு உட்பட்டிருக்கவேண்டும். ஆகவே, கி. பி. 124, 130 இவைகட்கு இடைப்பட்டகாலத்திலேயே கோதமீபுத்ரன் க்ஷஹராதரை உந்மூலனம் செய்ததும், ஆந்த்ரர் நாஸிக்கில் இடைவிடாமல் 28-வர்ஷங்களாவதாண்டதும், பின்னர் அதை ருத்ரதாமன் வென்றதும் நிகழ்ந்திருக்கவேண்டும். இது அஸாத்யமாதலால், நஹபானனது சாஸனங்களில் உபயோகப்படுத்தப்பட்ட சகம் 'சாகம்' அன்று. நஹபானனது சாஸனங்களில் காணப்படும் அக்ஷர வடிவங்கள், மாளவசகம் 72-என்ற கி.பி. 15-இல் பொறிக்கப்பட்டிருக்க வேண்டிய ஷோடாஸனது மதுராபுரிச்சாஸனங்களின் அக்ஷரவடிவங்களைவிட ப்ராசீனமாகத்தோன்றுவதால் (J. B. B. R. A. S. XX. p. 275), நஹபானனது சாஸனத்தில் காணப்படும் 46-ஆமாண்டு கி. பி. 15-க்கு முற்படவேண்டும். கி. மு. முதனூற்றாண்டில் தொடங்கிய சகம்

மாளவசகம் ஒன்றே ஆதலால், நஹபாநனது சாஸனங்கள் மாளவசகத்தில்தான் இருத்தல்வேண்டும். ஜோகல் தெம்பியில் நஹபாநனது வெள்ளிநாணயங்களில் 13000-த்திற்குமேல் ஒரே குவியலாகக் கிடைத்திருப்பதிலிருந்து நஹபாநன் அநேக வர்ஷங்களாண்டிருக்கவேண்டுமென்று தெரியவருகிறது. ஆகையால், அவனது சாஸனத்தில் காணப்படும் 46-ஆம் ஆண்டு அவனது அபிஷேககாலத்திலிருந்தே கணிக்கப்பட்டிருக்கலாமென்றும், மாளவசகம் அவனது ஆட்சிகாலமுதற்கொண்டே வழங்கப்பட்டிருத்தல்கூடுமென்றும் கருதுவது தவறாகாது. அஃதெங்ஙனமாயினும், அவன் வம்சத்தவரிடமிருந்து கோதமீபுத்ரன் வென்ற மாகாணங்களில் ஆகராவந்தியென்ற மாளவமும் ஒன்றாதலின், கி. மு. முதனூற்றாண்டின் பிற்பகுதியில் மாளவத்திலாண்டவன் நஹபாநனென்பதும், ஆகையால் அதேகாலத்திலும் அதேதேசத்திலும் விக்ரமாதித்யன் ஆண்டிருக்கமுடியாதென்பதும் பெறப்பட்டன. இனி, கி. பி. முதனூற்றாண்டிலிருந்த ஹாலன் இயற்றிய 'காதா ஸப்தசதீ' என்ற நூலில் ஒரு விக்ரமாதித்யனது செய்தி கூறப்படுகிறதே (V-64) எனில், இந்நூலாசிரியனான ஹாலனும் கி. பி. முதனூற்றாண்டிலிருந்த ஹால சாதவாஹநனும் ஒருவனேயென்பதற்குப் பெயரொற்றுமையும் கர்ணபரம்பரையுமன்றி வேறு ஆதாரம் காணகிலமென்றும், கி. பி. 7-ஆம் நூற்றாண்டிலிருந்த பாணகவி குறிப்பிடும் சாதவாஹநனது 'கோசமும்' இந்நூலும் ஒன்றேயென்பதற்கு ஆதாரமேயில்லையென்றும், கி.பி. 170-க்குப்பின்னரே இந்தியர்கள் வாரநாட்களையறிந்தவராயிருக்க, இந்நூல் 'செவ்வாய்க்கிழமை'யைக் குறிப்பதாலும் (III-61), கி. பி. 500-க்குமுன் இயற்றப்பட்ட வடமொழிநூல்களொன்றிலும் ராதிகையைக்குறித்த பிரஸ்தாபமே காணப்படாமலிருக்க, இந்நூல் 'ராதிகை'யைக் குறிப்பதாலும் (I. 89) இந்நூல் கி. பி. 500-க்குப்பின்னரே இயற்றப்பட்டிருக்கவேண்டுமென்றும், அதிற்காணப்படும் விக்கிரமாதித்யன் ஸ்கந்தகுப்தனே என்றும் கூறுவேன். ஆகவே, நவரத்னவாதம் ஆதாரமற்ற ஒரு கூற்றெனவே நன்கு நிரூபிக்கப்பட்டது.

பராதீன வாதம். 'குமாரஸம்பவ'மும், 'ரகுவம்ச'மும் அபூர்வமாக முடிவதால், இக்காவ்யங்களை இயற்றிய காளிதாஸர் வேண்டுமென்றே அவைகளை அவ்வாறு முடித்தனரென்றும், தம்காலத்தில் நமதுநாடு பராதீனமாய் அதாவது மிலேச்சரது ஆட்சிக்கு உட்பட்டு இருந்த

தென்பதை ஸூசிப்பதற்கே அவர் அவ்வாறு செய்தாரென்றும், கி. பி. 320-இலிருந்து 500-வரை இந்தியாவை இந்தியர்களான குப்தவரசரே ஆண்டுவந்ததாலும், காளிதாஸர் கி. பி. 473-க்கு முன்னரே இருந்தவராகவேண்டுவதாலும் அவர் கி. பி. 320-க்கு முன்னிருந்தவரென்றும் சிலர் கூறுவர். இவ்விரு காவ்யங்களும் அசுபமாய்முடிவதற்கு வேறு காரணங்கள் காட்டப்படுமாயின் இவ்வாதம் வலியிழந்துவிடுமென்பது கூறாமலே விளங்கும். அவ்வாறு காட்டக்கூடுமென்பதே எனது துணிபு. ‘குமாரஸம்பவ’மே காளிதாஸர் முதன்முதல் இயற்றிய நூலென்றும், கவித்திறம் முற்றும் பெறுவதற்குமுன், தேவர்களுக்கு ஸேநாபதியாகவும் ரக்ஷகராகவும் அவதரித்த குமரக்கடவுளது பிறப்பையும் வீரச்செயல்களையும் இந்நூலில் பாடமுயன்று, இப்பெருவிஷயத்திற்கும் மகாகாவ்யத்தின் இலக்கணங்களுக்கும்ஏற்ப, உயர்நடையையும் அர்த்தகௌரவத்தையும் சிறிதும் கைவிடாமல் முழுதும் எழுதிச்செல்வது அஸாத்தியமெனக்கண்டு, காளிதாஸர் இந்நூலைப் பூர்த்திசெய்யாது பார்வதியை ஈசன் மணந்தசெய்தியுடன் நிறுத்திவிட்டனரென்றும் கூறுவது தவறாகாதாகையால், ‘குமாரஸம்பவம்’ அசுபமாக முடிவதிலிருந்து காளிதாஸர் காலநிர்ணயவிஷயத்தில் யாதொரு பயனையுமடையமுடியாது. மேலும், காளிதாஸர் தம்காலத்துச் சரித்திரத்தை விளக்குவதற்கு இந்நூலை இயற்றவில்லை. இதில் சரித்திரக்குறிப்புகளேதாகிலும் காணப்படுமாயின் அவைகள் தற்செயலாகவே ஏற்பட்டிருக்கவேண்டும். ‘குமாரஸம்பவ’த்தில் கூறப்படும் அஸுரரது தீச்செயல்களும் தேவர்களது கஷ்டதசையும் காளிதாஸர்காலத்தில் மிலேச்சர் ஆதிக்கம்பெற்று இந்தியரை வருத்தினரென்று குறிப்பாலுணர்த்துமென்பதற்கு இப் பராதீனவாதிகள் காட்டும் ஆதாரமெல்லாம் ‘லப்தப்ரதிஷ்டா:’ என்றபதத்தை தேவர்களைக்குறித்து உபயோகித்திருப்பது ஒன்றே (II. 27). இப்பதத்தின் பொருள் ஸ்திரமான பதவியை அடைந்தவர் என்றிருப்பதாலும், தேவர்கள் படைப்புக்காலம் தொட்டே வானுலகிலிருப்பவராதலாலும், ஆகையால் வானுலகை ‘அடைந்தவர்’ என்பது அவருக்குப்பொருந்தாது வானுலகில் முன்னிராது பின்னடைந்தவர்க்கே பொருந்தும் ஆதலாலும், இப்பதம் இவ்வுலகில் ஆளும் அரசரையே குறிக்குமென்றும், அவர்க்குப்பகைவரான அஸுரர் மிலேச்சரேயாகவேண்டுமென்றும் அவர்வாதிக்கின்றார்.

இவ்வாறு கூறுமவர் இப்பதத்தை அடுத்துவரும் ‘ப்ரதமம்’ என்ற பதத்தையும், அதற்கு ‘பூர்வம்’ அதாவது முற்காலத்தில் என்ற மல்லிநாதருரையையும் கவனித்திருப்பராயின், தேவர்களும் வானுலகைப் படைப்புக்காலம்தொட்டே அநுபவித்தவரல்லர் என்றும், அவரும் அநேக யாகங்களைச்செய்ததின் பயனாகவே வானுலகை அடைந்தன ரென்றும், அவரும் இறக்கவேண்டியவரே என்றும், அவரை அமரர் என்றழைப்பதால் மனிதரைவிட நீண்ட ஆயுளை உடையவரென்று மாத்திரமே நாம் உணரவேண்டுமென்றும், அவர் செய்தவம் குன்றின் அவரும் இவ்வுலகிற்கே வரவேண்டுமென்றும், அவருடைய பதவி இந் நூலில் காண்பதுபோல அஸுரராலும் அநேக வேள்விகளியற்ற ஆற்ற லுடைய மக்களாலும் எப்பொழுதும் அபாயத்திலிருக்கிறதென்றும், அதுகாரணமாகவே அவ்வித மக்களது பேரெண்ணங்களையும் பெரு முயற்சிகளையும் வீணாக்க ஆசாபாசங்களில் அவரை இழுக்கும் முயற் சியில், அஸூயை நிறைந்த அவர்கள் கண்மூடாது கவனமாயிருக்கிறார் களென்றும் நமது புராணங்கள்கூறுவதை மறந்திரார். இதைக் காளி தாஸரே ‘அபிஞான சாகுந்தள’த்தில் (I) விச்வாமித்ரரது தபஸைக் கலைக்க ஸந்தேஹம்நிறைந்த தேவர்கள் மேநகையை அனுப்பின ரென்று அநஸூயைகூறியதற்கு துஷ்யந்தனது விடையாக பிறரது நிஷ்டை எப்பொழுதும் தேவர்கள்மனதில் அச்சத்தை விளைப்பது இயல்பே எனக்குறித்திருக்கிறார். ‘ரகுவம்ச’த்தின் அசுபமான முடி விற்கும் வேறு காரணங்கள் காட்டல்கூடும். அதுவே காளிதாஸர் கடைசியிலியற்றிய நூலென்றும், அதை முடிப்பதற்குமுன் அவர் இறந்திருக்கக்கூடுமென்றும் கூறுவதும் தவறாகாதாகையால், இப்பரா தீனவாதம் ஒரு வலியற்றவாதமேயெனப் பெறப்பட்டது.

யசோதர்மவாதம். இனி, கி. பி. 528-இல் மிஹிரகுலனென்ற ஹூணனைவென்ற யசோதர்மனது அவைப்புலவர் காளிதாஸர் என வேறுசிலர் கூறுவர். முதலில், ஹிமாலயத்தில் செல்வதற்கு முதன் முதல் ஸாத்யமாக்கியது யசோதர்மனே என்றும், அப்பர்வதத்தைக் காளிதாஸர் நன்கு அறிந்தவராகத்தெரிதலால், அவர் யசோதர்மன் காலத்தில் இருந்தவராதல் வேண்டுமென்றும் அவர் கூறுகின்றார். ஆனால் “எவனது தோள்வலியால் செல்வதற்குக் கஷ்டஸாத்தியமானது என்ற சிறப்புப்பெயரை ஹிமாலயம் இழந்துவிட்டதோ” என்று யசோ

தர்மனை பொறித்த மந்தஸாரஸிந்தத்தில் காணப்படுவதால் (G. I. pp. 147-8. No. 33), யசோதர்மன் காலத்திற்குமுன்னரும் ஹிமாலயத்தில் கஷ்டத்துடனுவது செல்வதற்கு ஸாத்தியமேயாமென்றும், யசோதர்மன்செய்ததெல்லாம் அதில் செல்வதை ஸுலபஸாத்யமாக்கியதே என்றும், கஷ்டஸாத்யமாயிருந்தபோதிலும் இயற்கை அழகுநிறைந்த இடங்களைக் கூர்ந்துபார்க்கவும் கவனிக்கவும் வல்லவராதலால், காளிதாஸர் யசோதர்மன்காலத்திற்குப்பிறகே இருந்திருக்கவேண்டுவதில்லை என்றும் தெளிவாகின்றது. ரகுமஹாராஜன் உத்ஸவஸங்கேதரை வென்று, அவர்கள் நாட்டில் அக்ஷோப்யரை ஸ்தாபித்தானென்று 'ரகுவம்ச'த்தில் காணப்படுகிறதென்றும், உத்ஸவஸங்கேதர் டிபெட்டர்களேயென்றும், அக்ஷோப்யர் மஹாயான பௌத்தர்கள் தொழுதுவரும் தேவதையென்றும், அவரது பூஜை டிபெட்டில் ஏற்பட்டது கி. பி. 6-ஆம் நூற்றாண்டில்தான் என்றும், ஆகையால் காளிதாஸர் அந்நூற்றாண்டிலேயே இருந்தவராதல்வேண்டும் என்றும் ஸ்ரீமாந்-ஹரப்ரஸாத சாஸ்த்ரி அவர்கள் வேறொருகாரணம் கூறுவர். 'ரகுவம்ச'த்தில் கூறியிருப்பதோ இதற்கு முற்றிலும் மாறாகவே இருப்பதாக என் சிற்றறிவிற்குத் தோன்றுகிறது. ரகுமஹாராஜன் உத்ஸவஸங்கேதரைவென்று (IV. 78), அவர்கள் ஸமர்ப்பித்த காணிக்கைகளைப்பெற்று கைலாஸ பர்வதத்திற்குப்போகாமலே மலையுச்சியினின்றும் இறங்கிவிட்டான் எனத்தெரியவருகிறது. (IV. 80-ம், மல்லிநாதருரையும்). ஆகையால், உத்ஸவஸங்கேதர் ஹிமாலயத்தின் இந்தியபக்கத்திலேயே இருந்தவரென்றும், ரகு கைலாஸபர்வதத்திற்கே போகாததால், அதற்கப்புறம் இருக்கும் டிபெட் அவர்கள் நாடு அல்லவென்றும் தெரிகிறது. மலையிலிருந்து இறங்குமுன், அம்மலையுச்சியில் தனது புகழை அசைக்க முடியாவண்ணம் ரகு நாட்டினான் என்றிருப்பதையே (IV-80) 'தத்ர' என்ற பதத்திற்கு 'ஹிமாத்ரௌ' அதாவது ஹிமாலயத்தில் என்ற மல்லிநாதருரையைக்கவனியாது டிபெட்டில் என்றும், 'அக்ஷோப்யம்' என்ற பதத்திற்கு 'அத்ருஷ்யம்' அதாவது அசைக்கமுடியாவண்ணம் என்ற மல்லிநாதருரையைக்கவனியாது மஹாயான பௌத்தரது தேவதை என்றும் பொருள் கற்பித்தும், 'யசோராசிம்' அதாவது புகழ்க்குவியலை என்றபதம் ஒன்றிருப்பதையே மறந்தும், சாஸ்த்ரி அவர்கள் எழுதிப்போந்தது ஆச்சர்யம். பிறகு, 'ரகுவம்ச'த்தில்

(XVII) அயோத்தியை ஸ்ரீ ராமரது புத்ரர் விட்டுப்போனதால் அழிவுற்றசெய்தி கூறப்படுதலிலிருந்து தலைநகராயிருந்த அப்பதியை விட்டு குப்தர்கள்போனதைக் காளிதாஸர் நேரில் பார்த்திருக்கவேண்டுமென்றும், அவ்வாறு போனது கி. பி. 6-ஆம் நூற்றாண்டில் ஹூணர்கள் இந்தியாவின்மேல் படையெடுத்துவந்தபிறகே என்றும், ஆகையால் காளிதாஸர் அந்நூற்றாண்டிலேயே இருந்தவராகவேண்டுமென்றும் அவர்கூறுவர். ஆனால், கி. பி. 6-ஆம் நூற்றாண்டிற்குமிகவும் முன்னரே முடிவுபெற்ற 'ராமாயண'த்திலேயே அயோத்யையழிவுற்ற இச்செய்தி காணப்படுதலால் (Ramayana Nirnaya Sagar Press Fd. VII. 108, 4-6) இவ்வாதம் வலியற்றதென விளங்கும். இனி, 'மேகதூத'த்தில் உஜ்ஜயினியிலிருந்து மந்தஸாரத்திற்குப்போகும் சாலையில் தேவகிரியிலிருக்கும் ஸ்கந்தர்கோயிலை காளிதாஸர் கூறுகிறாரென்றும், அதனருகில் குதிரையின்மேல் வீற்றிருக்கும் ஸ்கந்தர்சிலையொன்றுளதென்றும், அச்சிலையும் கோயிலும் ஸ்கந்தகுப்தன் இறந்தபிறகு அவன் ஞாபகார்த்தமாகவே அமைக்கப்பட்டிருக்கவேண்டுமென்றும், ஆகையால் காளிதாஸர் 6-ஆம் நூற்றாண்டிலிருந்தவிராகவேண்டுமென்றும் அவர் கூறுவர். ஆனால், அஸுரரொடுபொருத தேவஸைந்யத்திற்குக் குமரக்கடவுள் தலைவராக அவதரித்தவராதலால், அவரைப்பரிமாவின் மேலிருத்துவது தவறாகாது என்பதும், ஆகையால் அச்சிலையும் கோயிலும் ஸ்கந்தகுப்தனது ஞாபகார்த்தமாகவே அமைக்கப்பட்டிருக்கவேண்டுமென்ற நியதியில்லை என்பதும் தெளிவாம். கடைசியாக, 'குமாரசம்பவ'த்தில் (IV-27) வண்டுகள் 'மநோபவ' என்ற பெயரின் அக்ஷரங்களை ஒத்திருக்கின்றன என்று கூறப்பட்டிருப்பதாலும், மந்தஸார விகிதம் முதலான சாஸனங்களில் காணப்படும் 6-ஆவது நூற்றாண்டின் பிராஹ்மி லிபியிலேயே ம, நோ, ப, வ என்ற அக்ஷரங்களில் ஒவ்வொன்றும் ஒரு கருவண்டைப்போல அடியிலும் முடியிலும் விரிந்தும், இடையிற்குறுகியும் இருப்பதாலும் காளிதாஸர் அவ்வாறாம் நூற்றாண்டிலேயே இருந்தவராகவேண்டும் என்று அவர் கூறுவர். ஆனால், கி. பி. 5-ஆம் நூற்றாண்டின் பிராஹ்மி லிபியிலும் அவ்வாறே இருத்தலால், காளிதாஸர் 5-ஆம் நூற்றாண்டிலும் இருந்தவராதல் கூடும். மேலும், "அநேக அரசரின் முடிகளைவணக்கிய ஹூணர்தலைவனது ஆணைக்கடங்காத பிரதாபத்தைஉடையவனும், மிஹிரகுல

வரசனாலும் வணங்கப்பட்ட பாதங்களை உடையவனும்" என்று கி. பி. 532-இல் பொறிக்கப்பட்ட மந்தஸார சிலாசாஸனத்திலிருந்து மிஹிரகுலனை வென்றவன் யசோதர்மன் என்று நாம் அறிவோமேயாயினும், அவன் விக்கிரமாதித்யன் எனப் பெயர்பெற்றிருந்தான் என்றாவது, அவனே தன்னை அவ்வாறு சிறப்பித்துக்கூறிக்கொண்டானென்றாவது சொல்வதற்குச் சரியான ஆதாரமொன்றும் காணப்படவில்லை. அன்றியும், இவ்வாதத்திற்கு முற்றிலும் மாறாகவும் சில விஷயங்கள் இருக்கின்றன. இலங்கையில் இருந்த 'ஒரு காளிதாஸனும் அவனது ரக்ஷகனாய குமாரதாதுஸேநனென்ற இலங்கைவேந்தனும் கி. பி. 524-இல் இறந்தனர் என்று 'பூஜாவளீயம்' என்ற இலங்கைச்சரிதம் கூறுவதால், புகழ்பெற்ற 'நமது' காளிதாசர் கி. பி. 500-க்கு முன்னிருந்தவராக வேண்டும். மேலும், கி. பி. 531-முதல் 579-வரை ஆண்ட பாரஸீகவரசன் குஸ்ரு ஆநுஷிர்வானது கட்டளையை மேற்கொண்டு பெஹ்லவிபாஷையில் இயற்றப்பெற்ற 'பஞ்சதந்த்ர' மொழிபெயர்ப்பில் (Panchatantra I-51) 'குமாரஸம்பவ'த்திலிருந்து ஒரு மேற்கோள் (II-55) எடுத்தாளப்பட்டிருப்பதால் (Telang: was Ramayana copied from Homer? pp. 36-59), அம் மொழிபெயர்ப்புக்கு ஒரு தலைமுறைக்கு முன்னரே 'பஞ்சதந்த்ரம்' இயற்றப்பெற்றதென்றும், அப் 'பஞ்சதந்த்ர'த்திற்கு ஒரு தலைமுறைக்கு முன்னரே 'குமாரஸம்பவம்' இயற்றப்பெற்றதென்றுமே கருதியபோதிலும், காளிதாஸர் கி. பி. 500-க்குப்பின் இருந்தவராகாரென விளங்கும். இம் முடிபை வற்புறுத்தும் வேறொருசான்றும் காணப்படுகிறது. கி. பி. 473-இல் பொறிக்கப்பட்ட மந்தஸார சிலாசாஸனத்திற்காணப்படும் வத்ஸபட்டி இயற்றிய 10-ஆவது, 11-ஆவது ச்லோகங்களை (G. I. p. 83; Ind. Ant. XV. p. 198) காளிதாஸர் இயற்றிய 'மேகதூத'த்தின் 66-ஆவது (Pathak's Ed.) ச்லோகத்துடன் ஒப்பிட்டுப்பார்த்தால் காளிதாஸருக்கு வத்ஸபட்டியே கடன்பட்டிருக்கிறான் எனத்தெரியவரும். மேலும், ஜனங்களால் நன்குமதிக்கப்படும் ஒரு புலவரது நூல்களின் சிறப்புக்குணங்களை மனதில் இருத்தி ஒரு சாஸன வாசகாசிரியன் அவைகளைப்போல எழுதமுயன்றான் என்ல் பொருந்துமேயன்றி, ஒரு மஹாகவி தான் நூல்களியற்றுமுன் ஸத்காவ்யலக்ஷணங்கள் இவை என அறியவிரும்பி இக்காலத்துக் கல்வெட்டுப்புலவரைப்போல் ஸ்துபி

களில் பொறிக்கப்பட்ட சாஸனங்களை ஆராய்ந்தானெனல் ஒருசிறிதும் பொருந்தாது. அன்றியும், காளிதாஸரது ஒருங்கமைந்தவர்ணனையைச்சிதைத்து அநேகமாய் அவரது வாசகத்திலேயே அவ்வுபமான உபமேயங்களைக் கணக்கிடுவதுபோலவே வத்ஸபட்டி எழுதியிருத்தலும் கவனிக்கத்தக்கது. காளிதாஸரைப்போலவே, வத்ஸபட்டியும் 'ஸுபக' என்ற பதத்தின்பால் தனது விருப்பத்தை வெளியிடுகிறான். 'குமாரஸம்பவ'த்தில் காணப்படும் 'ப்ராஸாதமாலாஸு'என்ற பதத்தை (VII. 56) அநுஸரித்தே, வத்ஸபட்டி 'ப்ராஸாதமாலாபி:'என்ற பதத்தை 12-ஆவது ச்லோகத்தில் உபயோகித்திருக்கிறான். 44-ஆவது ச்லோகத்தில் 'ப்ரயத்நேன' அதாவது சிரமப்பட்டே தானெழுதியதாக ஒப்புக்கொள்ளும் வத்ஸபட்டி புகழ்பெற்ற காளிதாஸரின் சிறந்த நூல்களையே அநுஸரித்துத் தானும் எழுதியிருப்பதாகத்தெரிவிக்க விரும்புவது போலத்தோன்றுகிறது. மேலும், 'ரகுவம்ச'த்தில் (XVIII) ரகுவின் வம்சத்தாரது பெயர்களை ச்லேஷைப்படுத்திக் காளிதாஸர் எழுதிச் சென்றதுபோலவே, வத்ஸபட்டியும் 'பந்துவர்மன்' என்ற பதத்தை "பந்துப்ரியோ பந்துரிவ ப்ரஜானாம் பந்த்வார்த்திஹர்த்தாந்ருப பந்துவர்ம" என்ற 26-ஆவது ச்லோகத்தில் ச்லேஷைப்படுத்தி எழுதிப்போந்தனன். ஆகவே, இம்மந்தஸாரலிகிதத்தில் 'குமாரஸம்பவம்' 'மேகதூதம்,' 'ரகுவம்சம்', என்ற இம்மூன்று காவ்யங்களையும் அநுஸரித்து வத்ஸபட்டி எழுதியிருப்பதால், கி. பி. 450-க்கு முன்னரே காளிதாஸர் தமது நூல்களையெல்லாம் இயற்றியிருந்தனர் எனக் கருதுவது தவறாகாது.

முடிவுரை. இனி, இவ்விஷயம் பெரிதாயிருப்பதாலும், அதற்குப் போதிய அவகாசம் இங்கு கிடைத்தல் அரிதாதலாலும், இவ்வியாஸத்தை இத்துடன் நிறுத்துகின்றேன். நான் வாசிக்குமளவும் பொறுமையுடன் கேட்டருளியதற்காக இவ்வவையோர்க்கு என் நன்றியை விநயத்துடன் செலுத்துகின்றேன். இன்று யான் வாசித்ததைக்கேட்டு, இவ்விஷயத்தில் மேலும் அறியவிரும்புவோரை பங்களூரில் பதிப்பிக்கப்பெற்றுவரும் Journal of the Mythic Society என்ற பத்திரிகையின் 1918-ஆம் ஆண்டு ஜூலை, அக்டோபர் ஸஞ்சிகைகளைப்பார்த்துத் தெரிந்துகொள்ளவேண்டுகின்றேன். இவ்வியாஸத்

தைப்பிழையின்றித்திருத்தி உதவியதற்காக எனது நண்பர் ஸ்ரீமாந். பி. எஸ். ராமஸ்வாமி ஐயரவர்களுக்கும், ஸ்ரீமான். எஸ். தேசிவிநாயகம்பிள்ளையவர்களுக்கும், ஸ்ரீமாந். எஸ். வையாபுரிப்பிள்ளையவர்களுக்கும் யான் என்றும் கடமைப்பாடுடையவனாகிறேன்.

> ஸந்து ஹ்யாந்நாக்ஷ்ராஃ விவிதகலாகௌசலம் ப்ராப்தவந்தஃ ।
> ஸதிஸ்ருஷ்டிஸ்ருஷ்டிர்ந ஸாகல்யம் ப்ராப்தவாநம் ॥

கே. ஜீ. சங்கரையர்.

(இது, மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் பதினேழாம்வருடக்கொண்டாட்டத்திற்படிக்கப்பெற்றது.)

---

# இலக்கியங்கண்டதற்கிலக்கணமியம்பல்.

"சந்தனப்பொதியச்செந்தமிழ்முனியும்
சவுந்தரபாண்டியனெனுந்தமிழ்நாடனும்
சங்கப்புலவருந்தழைத்தினிதிருந்த
மங்கலப்பாண்டிவளநாட்டின்."

தலைநகராயும் நிலமகள் முகமோ திலகமோ கண்ணோ, நிறைநெடு மங்கலநாணோவென உலகுவியந்து புகழப்பெற்றதாயும்,

"திருமகட்கொருதாமரைக்கூடமேதிருமான்
மருமகட்குவெண்டாமரைமாடமேஞானர்
தருமகட்குயோகத்தனிப்பீடமேதரையாம்
பெருமகட்கணிதிலகமேயானதிப்பேரூர்."

"எண்ணும்போதுளத்துயரொழிப்பதுமகிழ்ந்தெழுந்து
நண்ணும்போதுமாமிடியையுந்தொலைப்பதுநாளுங்
கண்ணுநெஞ்சமுங்களித்திடச்செய்வதுகனிந்த
பண்ணும்பாடலும்பயில்வதுகூடலம்பதியே."

என்பனவாதியாகப் புலவர்பெருமக்களாற் பெரிதும் பாராட்டிப்பாடப்பெற்றதாயுமுள்ள மதுரைமாநகரில் நமது மதுரைத்தமிழ்ச்சங்கப் பதினேழாம்வருடோற்சவக்கொண்டாட்டம் நாளிது மாதம் 4, 5-ம் தெய்தி

களில் வெகு விமர்சையாய் நன்கு நடைபெற்றதென்ப தெவருமறிவர். மேற்படி வருடக்கொண்டாட்டத்தின் இரண்டாந்தினமாகிய இம்மதி ஐந்தாம்தேதிப்பிற்பகலில் "வெண்பாவிற் புகழேந்தி" என்றறிஞர்களாற் கூறப்படும்புலவர்பெருமானைப்பற்றியுபந்யசிக்கப்புகுந்த ஓர் வைஷ்ணவ பண்டிதசிகாமணியவர்கள், வெண்பாக்களின் அமைப்பு, இலக்கண முதலியவற்றைப்பற்றிப்பேசிவரும்போது, பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார்முதலியோர் கூறியுள்ள வெண்பாக்களும் இலக்கணவரம் பின்றித் தளைதட்டு முரண்படுகின்றனவெனக்கூறிப்போந்தனர். அவ்வமயம் ஆங்கவர்க்கணித்தாய் வீற்றிருந்த,

தொல்லைவளம்படைத்ததிரிசிரபுரத்துத் தோன்றுபுகழ்மீனாட்சி சுந்தரப்பேர் - வல்லபெருந்தகைமாட்டுப்பன்னூலாய்ந்து வளர்சங்க நூல்கள்பல வனைந்தச்சேற்றி - யெல்லவருங்கொண்டாடும்வண்ணமேனாட் டிறைவர்மகாமகோபாத்தியாயப்பட்டம் - ஒல்லைதரத்தமிழரசி முதற்சேயாகி யொளிர்கின்ற உ. வே. சாமிநாதையர் அவர்கள், பொய்கையாழ்வார் முதலிய மகான்களின்பாக்களிற் குற்றங்கற்பிக்கும் பிரசங்கியாரின்கூற்றைக் கூற்றெனமதித்துத் துடித்து உடனே அன்னோர் நூற்பாக்களில் குற்றங்கள்காணப்படின் அவைகள் அச்சுப்பிழைகளாக வேயிருக்கவேண்டுமென்று சூசிப்பித்தும் கவனியாது அப்பிரசங்கியார் மறித்தும்,சந்திரனிடத்துத்தோன்றும் களங்கங்கள் சந்திரனது பிரபையால் தெரியாது எவ்வாறு போகின்றனவோ, அவ்வாறே பெரியோர்களது பாக்களிற்காணும் குற்றங்களும் மறைந்துபோகின்றனவென்று மிகவும் வற்புறுத்திக்கூறி முடித்தனர்.

அந்தோ! பெரியோர்கள் எம்மதத்தினராயினும் அவர்களையெம் மதத்தினரெனக்கருதுங் கொள்கையுடையேனாதலான், அப்பிரசங்கியார் பொய்கையாழ்வார் பூதத்தாழ்வார் ஆகிய மகான்களின் பாக்களில் இலக்கணக்குற்றங்கற்பித்ததைச் சிரவணித்திருந்தயான் ஒரு சிறிதுஞ்சகிக்கலாற்றாது அன்னார் பிரசங்கமுடிவில் எழுந்து, ஸ்ரீமத். அக்கிராசனாதிபதியவர்களை விளித்து, பெரியார்களின் பாக்களுக்குப் பிரசங்கியார் குற்றங்கற்பித்துள்ளார்: ஆதலின், அதைமறுத்துப் பேசுதற்கெனக்கனுமதி கொடுத்தருளவேண்டும் எனக் கேட்டனன். அதற்கு ஸ்ரீமத். அக்கிராசனாதிபதியவர்கள் "நடுவில் பேசப்படாது இட்டமானால் முடிவிற்பேசலாம் என உமக்கு ஆக்ஞாபிக்கின்றேன்"

என்றெனக்கிட்ட கட்டளையை அந்நாள் அச்சபையின்கண் வீற்றிருந்தாரனைவருமறிவர். அச்சபையின்கண்பேசி அதனால் ஓர் பெரும் புகழ் அடைதல்வேண்டுமென்னும் அவாப்பற்றியாவது பிரசங்கியார் மீது குறைகூறவேண்டுமென்னுங்கோள்பற்றியாவது வந்தேனல்லேன். பெரியார்பாக்களிற் குற்றங்காணலாகாதென்பதுபற்றியேவந்தேனென்றறிஞரறிவாராக. ஸ்ரீமத். அக்கிராசனாதிபதியவர்கள் அன்று என்னைப் பேசவிடாததற்குச்சில நியாயங்கள் இருந்தனவென்பதை எல்லையற்ற சட்டஞானமும், சொல்வன்மையும் யாவரிடத்தும் ஒரேபடித்தான அன்பும் நற்குணநற்செய்கைகளும் உடையாரும், என்மாட்டு ஒரு கோடிவருடமாகக் கோடாதநட்புரிமைபூண்டு உழுவலன்புமிக்காரும், பிரபலநியாயவாதியுமாகிய நமது தமிழ்ச்சங்க காரியதரிசி ஸ்ரீமத். T. C. சீனிவாசையங்கார் அவர்கள் மூலமாக அறிந்தேன். எனினும் நமது பிரசங்கியாரின் கூற்றையே ஆதாரமாகக்கொண்டு அம்மகாசபையின்கண் நடைபெறும் பிரசங்கங்களைக்கேட்டானந்திக்குமாறு விஜயஞ்செய்திருந்தவர்களிற்சிலர், பெரியோர்கள் இலக்கணவரம்பின்றி வெண்பாமுதலிய பாக்கள் பாடுவார்கள்போலும், அத்தகையபாக்களையும் உலகமுவக்கும்போலும் என்று நினைப்பர் என்பதனாலும், வேறு சிலர், பெரியோர்களே இலக்கணவரம்புகடந்து பாடுவார்களாயின், நாமேன் இலக்கணவரம்பின்றிப்பாடலாகாதென்று துணிவர் என்பதனாலும், இன்னும் வேறு சிலர் இலக்கணத்தைச்சிறிதும்லட்சியஞ்செய்யாது தம்மனம்போனபடி பாக்கள்செய்து அவைகட்கு வெண்பா ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பாவெனப் பொய்ப்பெயர்புனைந்திடுவர் என்பதனாலும், அன்னவர்களது மயக்கறுப்பான்கருதி அடியிற்கண்ட விஷயங்களை நம் "செந்தமிழ்" வாயிலாக எழுதத்துணிந்தனன். இவ்விஷயங்களால் பொய்கையாழ்வார் பூதத்தாழ்வார்போன்ற மகான்கள் ஒருபோதும் தப்புச்செய்யுட்கள் செய்யார் என்பதும், அவர்கள்பாடும் பாடல்கள் எல்லாம் இ ல க் க ண அமைதி நிரம்பியவைகள் என்பதும், அத்தகுபாடல்களிற் பயின்றுவரும் சொற்பொருள் யாப்பு அணி நயங்களுக்கியையவே யிலக்கணம் செய்தல்வேண்டுமென்பதும் நன்கு புலப்படும். ஆகவே கனம் பிரசங்கியாராவது, ஏனைய வித்துவசிரேட்டர்களாவது நான் ஏதோ பிரசங்கியார்மீது குற்றங்கூறவந்ததாகக் கருதாது, பொய்கையாழ்வார் பூதத்தாழ்வார் ஆதியோர் மகான்கள்

எனவும், அத்தகுமேலோர்செய்தருளிய பாடல்கள் எவ்விதக்குற் றங்களுமின்றிச் சொற்சுவைபொருட்சுவையோடு பத்திரசம் ததும்பி, இலக்கணங்கட்கெல்லாம் ஆதியாய், நிற்கக்கூடியவைகள் எனவும், புறமதத்தினனாகிய மகமதியன் ஒருவன் முன்வந்து எடுத்துக்காட்டித் தங்களது சமயகுரவர்களுடைய சீரும் சிறப்பும் விரித்துக்கூறிய குரவர்களின் பாடல்களின் பரிசுத்தத்தையும் நன்கு புலப்படுத்தினனே எனத் தம் உள்ளங்கனிந்துவகைபூப்பர் எனவும் நம்பியே டிவிஷயங்களையீண்டுச்சுருக்கிக்கீழ் எழுதுகின்றனன்.

இம் மலர்தலையுலகில் பல்லாயிரம் பாஷைகள்உள. அப் பாஷைகளுக்குள், மதுரமுற்றதென்னும் பொருளைத்தராநின்றதும் தென்மொழியும் தேன்மொழியுமாகி ஆதிகாலந்தொட்டேயுள்ளதும் தெய்வத்தன்மைபொருந்தியதும் தமிழ். கணிகண்ணன்பொருட்டுக் காமருபூங்கச்சிமணிவண்ணன், கச்சியைநீத்துத் தன்பாய்சுருட்டிக்கொண்டுசெல்லும்படிசெய்ததும்தமிழ். மறுபடியும் கச்சிக்கணாகித் தன்பாய் விரித்துக்கொண்டிருக்கும்படி செய்ததும் தமிழ். தொண்டர்நாதனைத் தூதிடைவிடுத்ததும் தமிழ். முதலையுண்ட பாலனையழைத்ததும் தமிழ். எலும்பு பெண்ணுருவாக்கண்டதும் தமிழ். மறைக்கதவினைத் திறந்ததும் தமிழ். இத்தகைய தமிழ்மாதை மணந்து அவளது மங்கல நாணொளிர்வைத்த மாதவச்சிரேட்டர்கள் எண்ணிலர். புலவர் பெருமக்கள் பலர். அரசர் அநேகர். அன்னவர் லோகோபகாரார்த்தமாய்ச் செய்தருளிய வேதம், வாதம், வைத்தியம், சரித்திரம், ஆகமம், புராணம், சோதிடசாத்திரம், நீதிசாத்திரம், கணிதசாத்திரம், சிற்பசாத்திரம் முதலிய இலக்கியங்களோ அம்மம்ம! அபரிமிதமானவை. அத்தகு இலக்கியங்களில் பொதிந்துள்ள எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி முதலிய இலக்கணங்களையும், அவற்றுள் இலைமறைகாய்போற் கிடந்த அரிய பெரிய இலக்கணங்களையும் பொறுக்கி ஒருங்குதிரட்டிப் பண்டைக்காலப்பெரியார்களும் பிற்காலத்து நல்லிசைப்புலவர்களும் முதல்வழிசார்புநூலெனப் பல இலக்கணஞ்செய்துவைத்துள்ளார்கள்.

ஆகவே அறிஞர்களாலாக்கப்பெற்ற இலக்கியங்களிலிருந்தே யிலக்கணஞ்செய்யப்பட்டிருக்கின்றனவென்பதொருதலை. இதற்கு யாவருமேற்றுக்கொள்ளத்தக்க நற்சான்றுகள் உளவோவெனின், பலவுள. உலகத்திலே யெந்நாளும் உலவாப்பெரும்புகழ்படைத்துக் குணமென்னும் குன்றேறித் தபோமகிமையாற்சிறந்த இருடிகளிற் சிரேட்டமுற்றவரும், அருளொடுவாய்மையாலுயர்ந்து வலம்புரிச்சங்குகளுட் பாஞ்சசன்னியம்போலவே கலாவல்லவருள் அதி துல்யராய் மதிக்கப்பெற்றவரும், "குணகடல் குமரிகுடகம்வேங்கடமெனு நான்கெல்லையுள்" வழங்கி இருங்கடலென்னும் பெரும்பெயர்தாங்கிய செந்தமிழ்க்கடலைத் தோண்டி யாழமாக்கினோரும், பார்ப்பதியின்திருமணக்காட்சி காண்டற்பொருட்டுத் தேவரும் முனிவரும் பிறரும் இமயமலைக்கண் ஈண்டிய காலத்து, உயர்ந்த தென்றிசையைச் சமப்படுத்தியும், ஆகாயத்தை யளவுசெய்து சோமசூரிய கிரகபாதைகளைத்தடுத்து இடையூறுவருவித்த விந்தவெற்பினைத் தம் குடங்கைசேர்த்துப் பாதலத்திற்புகுத்தியதனைக்கர்வபங்கம்செய்தும், சமுத்திரத்திற்குள் புகுந்தொளித்துக்கொண்ட விருத்திராசுரனைக் கொல்வதற்காகக் குடங்கையினெடுங்கடலடக்கி யதை யாசமனம்செய்தும், கிரவுஞ்சனெனும் அவுணனைக் கைத்தண்டத்தாற்குற்றி மலையாக்கியும் இன்னும் எத்தனை எத்தனையோ அதியற்புதங்களைத் தம் தபோவலியாற்செய்துள்ளார் என்று நூல்கள் முறையிடுகின்றவரும், ஒல்காப் பெரும்புகழ்படைத்த தொல்காப்பியனாதிய பன்னிரு மாதவச்சிரேட்டர்களுக்கும் ஆசிரியராயுள்ளவரும், இந்திராதிதேவர்கட் கிடுக்கணேர்ந்துழியெல்லாம் உடுக்கையிழந்தவன் கரம்போலுதவி யன்னவர் துயர்தீர்த்த உத்தமோத்தமரும்,

"வடமொழியைப்பாணினிக்குவகுத்தருளியதற்கிணையாத்
தொடர்புடையதென்மொழியையுலகமெலாந்தொழுதேத்துங்
குடமுனிக்குவற்புறுத்தார்கொல்லேற்றுப்பாகர்"

எனவும்,

"விடையுகைத்தவன்பாணினிக்கிலக்கணமேனாள்
வடமொழிக்குரைத்தாங்கியன்மலயமாமுனிக்குத்
திடமுறுத்தியம்மொழிக்கெதிராக்கியதென்சொல்"

எனவும், புராணங்கள்கூறுமாறு பரமசிவனால் இலக்கணங்கற்பிக்கப் பட்ட பேரிலக்கணியும், தமிழ்முனியெனவோர் தனிப்பேர்பெற்றவரு மாகிய அகத்தியமாமுனிவர் தாமியற்றிய பேரகத்தியம் என்னும்பெய ரியமுதனூல் இலக்கணத்தின்கண்,

> "இலக்கியமின்றியிலக்கணமின்றே
> எள்ளின்றாயினெண்ணெயுமின்றே
> எள்ளினின்றெண்ணெயெடுப்பதுபோல
> இலக்கியத்தினின்றெடுபடுமிலக்கணம்"

எனச்சூத்திரஞ்செய்துள்ளார். சம்ஸ்கிருதத்திற்குப்பாணினிமுனிவர் செய்த பாணிநீயம் சிரேட்டமானாற்போலத் தமிழிற்கு அகத்தியமுனி வர்செய்த அகத்தியமே மாசிரேட்டமுற்றது என்பர் பெரியோர். ஆகவே, இவ்வொருசான்றே யிலக்கியத்தினின்றெடுபடுமிலக்கணம் என்பதற்குப் போதிய நற்சான்றாம். இம்மட்டோ! முன்னோர்நூலின் முடிபுரைவழியே முறைபடக்கண்டு, நன்னூலாகிய தொன்னூல்தமக் கெலாநன்னூலீதெனவகுத்த பொன்மதிற்சனகைச்சன்மதிமுனியருள் பன்னருஞ்சிறப்புவாய்ந்தபவணந்திமாமுனிவரும், "ஐம்பதின்மர்சங்கத் தாராகிவிடாரோகாற்பத்-தொன்பதின்மரென்றேயுரைப்பாரோ-இம்பர் புகழ்- வன்மீகநாதனருள்வைத்தியநாதன்புடவி - தன்மீதங்நாட்சரித்தக் கால்". என்று சிறப்பிக்கப்பெற்றவரும் குட்டித்தொல்காப்பியமென்றறி ஞர் புகழ்ந்துபாடப்பெற்ற இலக்கணவிளக்கம் என்னும் நூலாசிரியரு மாகிய வைத்தியநாததேசிகரும், "இலக்கியங்கண்டதற்கிலக்கணமியம்ப லில்" எனத்தனித்தனி சூத்திரஞ்செய்திருக்கின்றமையால், அறிவுடை யாரால் நியமிக்கப்படும் இலக்கியங்கண்டு, அதற்கு அவ்விலக்கியத்தின் அமைதியே இலக்கணமாகக்கூறல்வேண்டுமென்பது வெள்ளிடைமலை போல் தெள்ளிதினுணரக்கிடக்கின்றது. ஆகவே, அறிவுடையாராகிய பெரியார்களாலாக்கப்படும் பாக்களிற்கண்ட இலக்கியத்தின் அமைதியே யிலக்கணம் என்பதாயிற்று. இனி, பிரசங்கியாரால் இலக்கணக்குற்ற முடைய வெண்பாக்கள் பாடியுள்ளார்களென்று கூறப்பெற்ற பொய்கை யாழ்வார் பூதத்தாழ்வார் எத்தன்மைத்தர் என விசாரிப்பாம்.

பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் என்னுமிவர் கள் முதலாழ்வார் மூவரென்னப்படுவர். இம் மூவரும் திவ்யதேசயாத்

திரை செய்வான்கருதிப் பலவிடங்களி லாங்காங்குச் சஞ்சரித்துக் கொண்டு, கடைசியாகத் திருக்கோவலூருக்கு ஒருவரையொருவர் அறியாராய் வந்துசேர்ந்து, தம் பெருமானைத்தரிசித்துத் தனித்தனி யொவ்வோரிடங்களிற் றங்குவாராயினர். அங்ஙனமிருப்புழி யஞ்ஞான்று ஆயிரங்கரத்தோன் குடகடற்புக்கு அஸ்தமயமானபின், முதலிற் பொய்கையாழ்வார் ஒரு பாகவதரின் திருமாளிகையின் இடைகழியிற் சயனித்திருந்தனர். பூதத்தாழ்வார் சயனிக்கவிடந்தேடிச்சென்று பொய்கையாழ்வாரிருக்குமிடமணுகி "அடியேன்படுக்க இடமுண்டோ." என, பொய்கையாழ்வார், ஒருவர்படுக்கலாம். இருவர் இருக்கலாம் எனப்பணித்தனர். இருவருமாயிருக்கையில், பேயாழ்வாரும் அங்ஙனமே ஆங்குற்று "இடங்கிடைக்குமோ"வென அவ் இருவரும் "ஒருவர்படுக்கலாம், இருவரிருக்கலாம், மூவர் நிற்கலாம், வருக" எனப் பேயாழ்வாரும் அங்குற்றனர். ஆக மூவரும் ஒருவரையொருவர் விசாரித்தறிந்து களிப்புறுகையில், திருமால் பேரிருளையும், பெருமழையையும் உண்டுபண்ணி அவ்விடத்தை நெருக்காநிற்புழி, மூவரும் இஃதென்னென்று திகைத்து, பொய்கையாழ்வார் சூரியனை விளக்காக வேற்றிப்பார்க்க, பூதத்தாழ்வார் ஞானதீபத்தையேற்றிப்பார்க்க, பேயாழ்வார் இருவகைவிளக்காலும் இருளற்றபடியால் தம் பெருமானை உள்ளபடியே தரிசித்தனர் என்பர். அப்பொழுது, பொய்கையாழ்வார் "வையந்தகளியா" என்கிற முதல் திருவந்தாதி நூறுபாட்டானும், பூதத்தாழ்வார் "அன்பேதகளியா"என்கிற இரண்டாந்திருவந்தாதி நூறுபாட்டானும், பேயாழ்வார் "திருக்கண்டேன்" என்னும் மூன்றாந்திருவந்தாதி நூறுபாட்டானும் தோத்திரஞ்செய்து திருவருள் பெற்றனரெனவும், இவர்கள்கூறிய மேற்கண்ட பாக்கள் முந்நூறும் நாலாயிரப்பிரபந்தத்தோடு சேர்க்கப்பட்டிருக்கின்றனவெனவும் கூறுவர். இம் மூவரும் தெய்வப்புலமைமிக்க மெய்ஞ்ஞானிகளெனவும் எண்ணரும் புண்ணியம் பண்ணிய கண்ணிய நற்றவசிலர்களெனவும் உலகுவந்தேத்தியிருத்தலே, சகலதர்மங்களையும் பல்வகை நீதிகளையும் உறுதிபயக்கும் மோட்சபுருஷார்த்தத்தையும் கூறும் தன்மையாலும், ஸகலோபநிஷத்ஸாரமான கீதையையுட்கொண்டிருத்தலாலும் "பாரதம் பஞ்சமோ வேதம்." என்றும்,

"நீடாழியுலகத்துமறைநாலொடைந்தென்றுநிலைநிற்கவே
வாடாததவவாய்மைமுனிராசன்மாபாரதஞ்சொன்னநாள்."

என்றும் வரும் வாக்கியங்களால் யாவராலும் ஐந்தாம்வேதமெனப் போற்றப்படும் வில்லிபுத்தூராரர்பாரதம் சிறப்புப்பாயிரத்தில் கூறப் பெற்றுள்ள,

"பாவருந்தமிழாற்பேர்பெறுபனுவற்பாவலர்பாதிநாளிரவில்
மூவருநெருக்கிமொழிவிளக்கேற்றிமுகுந்தனைத்தொழுதநன்னாடு."

என்னும் திருவிருத்தமே நிலைநிறுத்தியுள்ளது. ஆதலான் மேற்கூறிப் போந்த மாதவசிரேட்டரும் மஹானுபாவருமாகிய பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார் இயற்றியுள்ள பாக்களனைத்தும் மஹா பரிசுத்தமுள்ளவைகளே. அப்பாக்களிற் குற்றமுண்டெனல் ஒரு சிறிதும் பொருந்தாதே. அப்பாக்களிற் பயின்றுவரும் இலக்கியங்களுக்கேற்ப விலக்கணமமைத்தலே யறிவுடைமை. அங்ஙனமின்றி யப்பாக்களில் இலக்கணக் குற்ற முண்டெனவுரைத்தல் அறமாமோ, அம்மம்ம! அறக்கொடுமை யன்றோ. இனி பிரசங்கியார்கூறியாங்கு பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார்பாடிய வெண்பாக்களில் குற்றமுண்டோவென வாராய்தற்குப் பிரசங்கியார் அம் மூதறிஞர்கள்பாடியதாகச்சொல்லும் தப்புவெண் பாக்களில் இரண்டொன்றையேனும் எடுத்துக்காட்டாதது யாது காரணமோ: அங்ஙனம் எடுத்துக்காட்டியிருப்பாராயின், அச்செய்யுட்களில் அமைந்துகிடக்கும் இலக்கணங்களையும் எடுத்துத் தக்க மேற்கோள்களுடன் நன்குபுலப்படுத்தியிருப்பேன். ஆதலான், பிரசங்கியாரால், இலக்கணமின்றித் தப்புச்செய்யுட்கள் என்று நினைக்கப்படும் அந்நுண்ணறிவாளர் இயற்றிய வெண்பாக்கள் இன்னின்னவென்று கூறாமைக்கு யான் மிக்க விசனமுறுகின்றேன். ஆயினும், வெண்பாவி னிலக்கணங்களையும் அவற்றின் மரபு ஒழிபுமுதலிய விசேட இலக்கணங்களையும், அவைகள் ஆங்காங்குப்பயின்றுவருமிலக்கியங்களையும் ஒருவாறு ஈண்டு எடுத்துக்கூறுகின்றனன். வெண்பாக்கள், வெண்டளையும் அளவடியும்பெற்றுச் செப்பலிசையுடையதாய், நாள், மலர் என்னும் ஓரசைச்சீர்வாய்பாடுகளும் காசு, பிறப்புஎன்னுங் குற்றுகர வாய்பாடுகளுமாகிய நான்கனுள் ஒன்றாய்முடிந்த இறுதிச்சீரினையுடைய சிந்தடி இறுதியடியாய்வரப்பெற்றுமுடியும் என்பது இலக்கணி

கள்விதித்த பொதுவிதி. மேற்கூறியவற்றுள், வெண்டளையென்பது வெண்சீர்வெண்டளையெனவும், இயற்சீர்வெண்டளையெனவும் இருவகைத்து. வெண்சீர்நின்று, நேரசைமுதலாய் வருஞ்சீருடன்புணர்தற்கண் உளதாகும் தளை வெண்சீர் வெண்டளையென்பர். அஃதாவது காய்ச்சீர்க்குமுன்னே நேர்வருதல். அகவலுக்குரிய சீராகிய இயற்சீர் நின்று, வருஞ்சீருடன் ஒன்றுமையாகிய விகற்பப்புணர்ச்சிக்கண் உளதாகுந்தளை இயற்சீர்வெண்டளை என்பர். இஃதாவது மாச்சீர்க்கு முன்நிரையும் விளச்சீர்க்கு முன்நேரும் வருதல். இதனை,

"தன்சீர்தனதொன்றிற்றன்றளையாம்...........வெண்டளையாம் ஒண்சீரகவலுரிச்சீர்விகற்பமுமொண்ணுதலே" என்னும் ஆசிரியர் அமிர்தசாகரர் காரிகையாலுணர்க.

அளவடியென்பது நான்குசீர்கொண்டு முடிவுபெற்றுநிற்கும் அடியாம். இதனை நேரடியென்றும் வழங்குவர். குறுகுதலும் நெடுகுதலுமின்றி அளவுபட்டுநிற்றலால் அளவடி எனவும், யாண்டும் பயின்று தலைமையெய்திநிற்றலால் நேரடிஎனவும் கூறுவர். "நாலொருசீரடியளவொடுநேர்" என்பது காரிகை.

செப்பலிசை என்பது செப்பிக்கூறும் ஓசையெனப்படும். அஃதாவது, அழைத்துக்கூறாமல் ஒருவனுக்கு மற்றொருவன் இயல்புவகையானே ஒருபொருண்மைக்கட்டுரைக்குங்கால் எழுகின்ற இசை செப்பலிசையென்பர் நச்சினார்க்கினியர். இதனை, "அஃதான்றென்ப வெண்பாயாப்பே" என்னும் தொல்காப்பியச்சூத்திரவுரையாலறிக. இத்தகைய செப்பலிசையாவது, ஏந்திசைச்செப்பல், தூங்கிசைச்செப்பல், ஒழுகிசைச்செப்பல் என மூவகைப்படும்.

ஏந்திசைச்செப்பல் - முற்றும் வெண்சீர்வெண்டளைபெற்றுவரும் வெண்பாவில் நிகழும் இசை. இதனை "யாதானுநாடாமால்" என்னும் குறள்வெண்பாநோக்கியறிக.

தூங்கிசைச்செப்பல்.—முற்றும் இயற்சீர்வெண்டளை பெற்றுவரும் வெண்பாவில் நிகழும் இசை. இதனை "இளையானடக்கம்" என்னும் நாலடிவெண்பாநோக்கி அறிக.

ஒழுகிசைச்செப்பல். — இருவகைவெண்டளையும்விரவிய வெண்பாவில் நிகழும் இசை. இதனை "வளம்படவேண்டாதார்" என்னும் வெண்பாநோக்கியறிக. இம்மூவகைச்செப்பலோசைக்கும்,

"வெண்சீர்வெண்டளையான்வருமியாப்பை
யேந்திசைச்செப்பலென்மனார்புலவர்"

"இயற்சீர்வெண்டளையான்வருமியாப்பைத்
தூங்கிசைச்செப்பலென்மனார்புலவர்"

"வெண்சீரொன்றலுமியற்சீர்விகற்பமு
மொன்றியபாட்டேயொழுகிசைச்செப்பல்"

என்பன முறையே சூத்திரம்.

வெண்பாவினிறுதியில்வரும் சீர்களென்று முன்னர்க்கூறப்பெற்ற நாள் என்னும் வாய்பாட்டு நேரசைச்சீரும், மலர் என்னும் வாய்பாட்டு நிரையசைச்சீரும், காசு, பிறப்பு என்னும் குற்றுகரவாய்பாட்டுச்சீர்களும் இறுதியிற்சீராய்நின்று வெண்பாவிற்குரிய செப்பலிசையை இனிதுமுடிக்கும் சிறப்புடையனவாதலால் மற்றையவாய்பாட்டுச்சீர்கள் வெண்பாவினிறுதியில் வரலாகாவென்பது இலக்கணம். ஆனல், பல கல்வியிற்பெரியார்பாடிய வெண்பாக்கள் ஏகதேசம் இதுகாறும் கூறிவந்த வெண்பாவிலக்கணங்களைக்கடந்து செல்கின்றன. ஆயினும் அவைகள், நுண்மாணுழைபுலமிக்க ஒண்மாண்புடைக் கவிகளாலும் பூதலம்போற்றும் மாதவமணிகளாலும் இயற்றப்பெற்றவைகளாதலான், அப் பாக்களிற்கண்ட இலக்கியங்களைக்கற்றவரனைவரும் முற்றிலுமேற்று அவ் விலக்கியங்களுக்கியையவே இலக்கணமும் செய்துள்ளார்கள். இஃது அடிப்பட்ட சான்றோரிடம் முறைப்பட்ட கேள்வியுடைய நம் முன்னையோர் தொன்றுதொட்டுச்செல்லும்நெறி. அம் மரபு நெறிகுலையாது அவர்வழிச்சேறலே நம்மனோர்கடன். ஆதலான் அத்தகைய உதாரணச்செய்யுட்களில் சிலவற்றைமட்டும் ஈண்டு குறிக்கின்றனன். அவையாவன:—

(1) வெண்பாவினுள் ஓரடியுள் நான்குசீர்கள் வருதலன்றி ஐஞ்சீர்களும் அருகிவருகின்றன. ஐஞ்சீரடுத்தலுமண்டிலமாதலும் - வெண்பாயாப்பிற்குரியவல்ல." என்னும் இலக்கணமிருப்பினும், கடைச்சங்க

மருவியபதினெண்கீழ்க்கணக்குநூல்களுள் ஒன்றாகியஐந்திணையைம்பது என்னும் நூலிற் பாலைத்திணைக்கண் பருவங்கண்டழிந்த தலைமகள் தோழிக்குச்சொல்லிய,

> "உதிரந்துவரியவேங்கையுகிர்போலெதிரி
> முருக்கரும்பவீர்ந்தண்கார்நீங்க—வெதிருநர்க்
> கின்பம்பயந்தவிளவேனிற்காண்டோறுந்
> துன்பம்கலந்தழியுநெஞ்சு."

என்னும் வெண்பாவினுள் இரண்டாமடி ஐஞ்சீரான்வந்திருக்கின்றது. இதற்கிலக்கணம்:—

> "வெண்டளைவிரவியுமாசிரியம்விரவியும்
> ஐஞ்சீரடியுமுளவெனமொழிப."

என்னும் தொல்காப்பியச்செய்யுளியற்சூத்திரத்துப் பேராசிரியர், "வெண்டளைவிரவியும், ஆசிரியம் விரவியும் என்றது என்னையெனின்—அவ்வைஞ்சீரடி வெண்பாவோடு விராயும், ஆசிரியப்பாவோடு விராயும் வரும் என்றவாறு";

> "கண்டகம்பற்றிக்கடகமணிதுளங்க
> வொண்செங்குருதியினேடிடப்பதே—கெண்டிக்
> கெழுதகையில்லேன்கிடந்தூடப்பன்னா
> ளழுதகண்ணீர்துடைத்தகை."

என்னும் வெண்பாவினுள், இரண்டாமடி ஐஞ்சீரான்வந்தது." எனவும் கூறியவாற்றானும், நச்சினார்க்கினியர், "வெண்பாவோடுங் கலிப்பாவோடும்விராயும், ஆசிரியப்பாவோடு விராயும், ஐஞ்சீரடிகளுமுள என்று கூறுவர்புலவர் என்றவாறு" எனவும், "கண்டகம்பற்றி...... ...............கண்ணீர்துடைத்தகை"

> "இடங்கிற்கிடங்கிற்கிடந்தகயலைத்
> தடங்கட்டடங்கட்டளிரியலார்கொல்லார்—கிடங்கில்
> வளையாற்பொலிந்தகைவையெயிற்றுச்செவ்வா
> யிளையாடன்கண்ணொக்குமென்று"

இவற்றுள் இரண்டாமடி ஐஞ்சீரடிவந்தவாறுகாண்க." எனவும் கூறியவாற்றானும் நன்குணரக்கிடக்கின்றமையால், வெண்பாவினுள்

ஐஞ்சீரடிவருதல் கூடுமென்பதும் ஆன்றோர் இலக்கியங்களுக்கியைய இலக்கணஞ்செய்துள்ளார்களென்பதும் நன்குபெறப்படுகின்றது.

(2) வெண்பாவிலே கனிச்சீர் எனப்படும் வஞ்சிச்சீர்புகுந்து விரவு மாயின், செப்பலோசையாகிய அதன் இலக்கணம் சிதைந்து வேறாய் விடும் என இலக்கணநூலாசிரியர்பலரும், "மாஞ்சீர்கலியுட்புகா" என்ற தொடக்கத்தையுடைய காரிகையில் "வெள்ளைத்தன்மைகுன்றிப்-போந் சீர்கனிபுகில்" என ஆசிரியர் அமிர்தசாகரரும், கூறியிருப்பினும், நல்லா றொழுக்கின்றலைநின்று பல்லாற்றானுஞ்சிறந்துவிளங்கிக் கல்வித்துறை கொண்டு நல்வித்தகம்படைத்தசொல்உத்தமக்கவிகள்பலர் தாமியற்றி யுள்ள வெண்பாக்களில் கனிச்சீர்வரப்பாடியுள்ளார்கள். அவற்றுள் சிலவற்றை யெடுத்துக்காட்டுவல்.

"எண்டிசையுமன்னுமெழில்வாளிளங்கதிரோன்
கொண்டல்பொழிலேழ்குலவரையோ—டண்டர்பதி
முட்டப்பரந்ததேவின்னொளிமுற்றும்
வட்டத்திகிரிசூழ்மண்."

'ஈதலறந்தீவினைவிட்டீட்டல்பொருளெஞ்ஞான்றுங்
காதலிருவர்கருத்தொக்க—ஆதரவு
பட்டதேயின்பம்பரனைநினைந்திம்மூன்றும்
விட்டதேபேரின்பவீடு."

இவ்வெண்பாக்களில் முறையே அண்டர்பதி, ஈட்டல்பொருள் என்னும் கனிச்சீர்கள் வந்துள்ளன. எனினும் இவற்றை "இலக்கியங் கண்டதற் கிலக்கணமியம்பல்" என்னும் விதிபற்றிக் கல்விமான்கள், ஒற்றுக்கள்நீக்கி யலகிட்டுக்கூவிளங்காய்வாய்பாட்டுவெண்சீராகக்கொள் கின்றனர். இங்ஙனம் சான்றோர் இயற்றிய நூற்செய்யுட்களில் அமைந்துகிடக்கும் இலக்கியங்களுக்கொப்பவே,

"சொல்லாரும்வல்லினமல்லாதமெய்யிடைதோன்றமொற்று
நில்லாதுநேர்நேர்நிரையென்றுரைப்பர்நிரம்பியநூற்
கல்லாதமார்தர்கடேமாங்கனியென்பர்கற்றுணர்ந்த
நல்லாரனைவருங்கூவிளங்காயெனநாட்டுவரே."

என இலக்கணம் கண்டிருக்கின்றனர். இஃதன்றியும், "வெண்பா, கட்டளைக்கலித்துறை முதலியவற்றிலே சீர் சிதைவுழி, இருகுறிற்கு

நடுநின்ற ஒற்றெழுத்து அவ்விருகுறிலும் இணைந்து நிரையசையாதல் வேண்டி நீக்கப்படுதலுமுண்டு" என்று யாப்பருங்கலக்காரிகையின் ஒப்புயர்வில்லாக் கல்விவல்லவராகிய உரையாசிரியர் ஒருவர் கூறுகின்றனர். ஆகவே, கனிச்சீர் வெண்பாவினுள்வரலாகாதெனினும், முதறிவாளர் கூறிய வெண்பாக்களில் அச்சீர்வருமாயின் மேற்கூறியவாறலகிட்டுக் கூவிளங்காய் எனக்கொண்டு வெண்சீரின்பாற்படுத்தி யதனையே யிலக்கணமாகக்கொள்ளல் வேண்டுமென்பது பெறப்படுகிறது.

(3) "அருளல்லதியாதெனிற்கொல்லாமைகோறல்
பொருளல்லதவ்வூன்றினல்."

என்னும் திருக்குறள்வெண்பாவில்வரும் அருளல்ல+தியாதெனில் என்னுஞ்சீர்கள் முறையே புளிமாங்காய், கருவிளங்கனி என்னும் சீர்களாகி வெண்டளைதட்டுக் கலித்தளைவந்துவிரவி வெண்பாவிலக்கணம் சிதைவுறுகின்றது. இஃது எல்லாமதத்தினரும் நல்லாதரங்கூறும் நீதிவேதம் போன்றதும், அறம், பொருள், இன்பம், வீடு என்னுஞ் சதுர்வித புருடார்த்தங்களைவிளக்கும் முதனூல்களில் இலைமறைகாய் போற் பலவிடங்களினும் மறைந்துவெளிப்படாதிருந்த மெய்ப்பொருள்களையெல்லாம் தொகுத்து உலகத்தாருக்குக்கொடுத்தவரென்னுங்காரணம்பற்றித் தெய்வீகமும் உயர்வும், வண்மையும் உடையவரெனப் பொருள்படும் தெய்வப்புலமைத்திருவள்ளுவராலாக்கப்பட்டதுமான பொய்யாமொழி என்னும் தெய்வநூல்வெண்பாவாதலால் அறிஞர் இவ்வெண்பாவில்வரும் தியாதெனில் என்னுஞ்சீர்க்கணுள்தாய குற்றியலிகரத்தை நீக்கி, கூவிளம் என்னும் சீராக அலகிட்டு "இலக்கியங் கண்டதற்கிலக்கணமியம்பல்" என்னும் முறைப்படி முடித்துள்ளார்கள். இதுபோலவே வெண்பாமுதலியவற்றில் சீரும் தளையும் சிதையுமாயின் குற்றியலுகரமும், அளபெடையுயிரும் அலகுபெறாது வாளா நிற்கும் என்ப. இதற்கிலக்கணம்—"சீருந்தளையுஞ்சிதையிற்சிறியஇ உ அளபெ—டாருமறிவரலகுபெறாமை" என்னும் காரிகையாலறிக.

(4) வெண்பாவினிறுதியில் நாள், மலர் என்னும் வாய்பாட்டு ஓரசைச்சீர்களும் காசு, பிறப்பு என்னும் ஈரசைவாய்பாட்டுச்சீர்களும் நின்று செப்பலிசையையினிது முடிக்கும் இயல்புடையனவென முன்னர்க்கூறியுள்ளேன். இவற்றுள் காசு, பிறப்பு என்பன அரைமாத்

நிரையுடையவாய் ஒடுங்கியிசைக்கும் குறிலீறுடையன. இவை போன்றுவரும் முற்றுகரவீற்றுச்சீர்களையும் இசையொப்புமைபற்றி இவற்றொடுகூட்டி ஆசிரியர் தொல்காப்பியர் அசையென்றுகொள்வர். அவர்கூறும் அசை நேர், நிரை, நேர்பு, நிரைபு என நான்கு.

"இருவகையுகரமோடியைந்தவைவரினே
நேர்புநிரைபுமாகுமென்ப"

என்னும் தொல்காப்பியச்சூத்திரப்படி வெண்பாவினிறுதிச்சீர்க்கண் வரும் காசு, பிறப்பு என்னும் வாய்பாட்டுச்சீர்கள் முறையே நேர்பு, நிரைபு என்னும் அசைகளாகின்றன. ஆதலான் காசு, பிறப்பு என்பன தேமா, புளிமாவென்பவைகளிலடங்கா. ஏனெனின், தேமா, புளிமா என்பன இருமாத்திரையுடையவாய் விரிந்திசைக்கும் நெடிலீறுடையனவாதலானென்க. ஆகவே, வெண்பாக்களிலிறுதியில் நேர்பு, நிரைபு என்னும் வாய்பாட்டசைச்சீர்கள் வருதலன்றி, தேமா புளிமா என் னுஞ்சீர்கள் வாரவென்பதுபெறப்படுகிறது. ஆனால் சிற்சில மகாகவிகள் ஓவ்வோரிடங்களில் இந்நியதிகடந்து பாடியுள்ளார்கள். இதற்கு உதாரணம்:—

"நல்லதொருபுதுமைநாட்டிற்கண்டேனதனைச்
... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ...
குதிரைவிற்கவந்தவனைக்கூடி"

என்னும் வெண்பாவின் ஈற்றுச்சீரானும் பிறவற்றானும் காண்க.

இதுகாறும் மேற்கூறிப்போந்த நியாயங்களால் தாமுன் அறிந்த தற்கிதுமாறாயின் எந்நூல்விதியோ எனவேயெண்ணுக" என இலக்கணக்கொத்துடையார் கூறியவாறு நல்லிசைப்புலமையோரும் நற்றவ முனிவரும் செய்துள்ள வெண்பாக்கள் எவ்விதக்குற்றமுமில்லாதவைகளெனவும், நம்போல்வார்படித்த இலக்கணங்களுக்கு மாறாய் யாதேனும் குற்றங்கள் காணப்படின் அவைகள் நாம் படியாத இலக்கணவிதிகளுக்குட்பட்டிருத்தல்வேண்டுமெனவும் கொள்ளல்வேண்டுமேயன்றி, பெரியார் செய்யுட்களில் ஒருபோதுங்குற்றங்காணல் ஆகாது. "கற்றதுகையளவுகல்லாதுலகளவு" என்றார் ஔவைப்பிராட்டியார். இயல் இசை நாடகமென்னும் முத்தமிழுக்கும் முதனூல் இலக்கணமாகிய

அகத்தியம் பன்னீராயிரம் சூத்திரங்கொண்டதென்பர். அவற்றுள் சிலவே உரையாசிரியர்களால் எடுத்தாளப்பட்டுள்ளன. பிறவெல்லாம் இறந்தொழிந்தன. அங்ஙனம் இறந்தொழிந்தசூத்திரங்கள் எத்தகைய அரியபெரிய விதிகளையுடையனவோ? என்னென்ன ஒழிபுவழக்கு மரபிலக்கணங்களைக்கூறினவோ? நமக்கென்தெரியும்; நாம் எவ்வாறறிதல்கூடும். "கல்விகரையிலகற்பவர்நாள்சில- மெல்லநினைக்கிற்பிணிபல." என்றாராகலின் நம்வாழ்நாள் சிலவும், அறிவு அற்பமும், பிணிகள்பலவுமாயிருத்தலால், கரைகாண்டற்கரிய கல்விக்கடலை நாம் எவ்வாறுகடத்தல்கூடும். ஆதலான் பிரசங்கியார் இனி எந்தப்புற்றில் எந்தப்பாம்பு இருக்குமோ என்ற பழமொழியையும், "யாகாவாராயினும் நாகாக்க காவாக்கால் - சோகாப்பர் சொல்லிழுக்குப்பட்டு" என்னும் வேதவாக்கையும் உணர்ந்தொழுகுவாராக. ஏன் இங்ஙனம் வற்புறுத்திக்கூறியுள்ளேனெனின், பிரசங்கியார் செய்யுட்குற்றங்கற்பித்துத்தூஷித்த பொய்கையாழ்வார் பூதத்தாழ்வார் இருவரும் முதலாழ்வார் மூவரைச்சேர்ந்தவர்கள். அன்னவரிருதவமக்களும் வைஷ்ணவராகிய பிரசங்கியாருக்குக் குருமரபுடையார்கள். அத்தகு குருமரபுடைய முத்தர்கள் யாத்த உத்தமப்பாக்களில் இலக்கணக்குற்றமுளதாகக்கூறித் தூஷித்தல் குருநிந்தையாகும். பஞ்சமாபாதகங்களில் ஒன்றாகிய குருநிந்தைசெய்தல்மகாபாதகமன்றோ! கற்றறிவுடையோர் கொன்னே மாபாதகத்துக்காளாதல் ஏனோ! பிரசங்கியாரே உய்த்துணர்வாராக.

இன்னும் விரிக்கின், வரம்பின்றிப்பெருகுமாதலானும் நம் செந்தமிழ்ப்பத்திரிகையிடந்தராதென்னும் பீதியாலும் இவ்வளவோடு நிறுத்துகின்றனன். ஆதலான் பிரசங்கியார் என்னை வேறாக நினையாது யாமிருவரும் ஒரே சங்கத்தங்கத்தினராதலால் நண்பனாகக்கருதி, "நகுதற்பொருட்டன்றுநட்டன்மிகுதிக்கண் - மேற்சென்றிடித்தற்பொருட்டு" என்னுந்திருக்குறளை நினைந்து அன்புபாராட்டுவாராக.

இங்ஙனம்,

சோதகுடி,

எம். கே. எம். அப்துல்காதிறு.

---

# செந்தமிழபிமானிகளுக்கு ஒரு விஞ்ஞாபனம்.

செந்தமிழை அன்புடன் வளர்க்கும் புலவர்களே!

பண்டிதர் ஸ்ரீமான். மு. இராகவையங்காரவர்கள் இயற்றியருளிய "சேரன்-செங்குட்டுவன்" என்ற அரிய ஆராய்ச்சிநூலைப் படித்துத் தமிழகமெல்லாம் களித்திருப்பதை யான்கூறவேண்டுவதில்லை. ஆயினும், அதுஓர் ஆராய்ச்சிநூலாதலாலே அதிற்கூறப்படும் சில கொள்கைகள், விவாதத்திற்கு இடமாயிருப்பது இயல்பே. அதை வெளியிட்டதில் அந்நூல் ஆசிரியர் கருத்தும் யாவரும் தம்கொள்கைகளைச்சிறிதும்மறுக்காமல் ஒப்புக்கொள்ளவேண்டுமென்பதல்ல; படிப்பவர்மனதில் அவ்விஷயங்களைத் தீரஆராய்தல் வேண்டுமெனும் அவா எழுந்து, அவைகளைப்பலரும்: ஆராய்ந்து, உண்மை வெளிப்படுத்தவேண்டுமென்பதே. இக்கருத்துக்கநுகுணமாகவே பலரும் அவ்விஷயங்களை ஆராய்ந்து தம்தம் அபிப்பிராயங்களை வெளியிடலாயினர். அவைகளால் பல அரியபெரிய விஷயங்கள் விளங்கலாயின எனினும், அவ்வியாசங்களியற்றிய பலரும் பிறரையும் அப்பிறர் கொள்கைகளையுங் குறிப்பிடுங்கால், "என அறியார் கூறுவர்", இங்ஙனம் சிலர் பிதற்றுவர்" என்பனபோன்ற பல இகழ்ச்சிவாக்கியங்களை உபயோகித்திருக்கின்றனர். இவர்களிலெல்லாம் மிகவும் பிழைபாடு இயற்றியவர் 'கதைக்கொத்து' என்ற அரியநூலை வெளியிட்டுதவிய ஸ்ரீமான். வே. இராஜகோபாலையங்காரவர்களே. செந்தமிழ்ப்பத்திராதிபர், ஸ்ரீ சேதுபதி மஹாராஜா அவர்களது ஆணையைமேற்கொண்டு 'வஞ்சிமாநகராராய்ச்சி'யில் தமது அபிப்பிராயத்தையும்,ஸ்ரீமான். ரா. இராகவையங்காரவர்கள் கூறிய நியாயங்களுக்குத் தமக்குத்தோன்றிய ஆக்ஷேபங்களையும் மிதமாகவும் விளக்கமாகவும் பிறரையும் அப்பிறர் கொள்கைகளையும் இகழாமலும் கூறியிருக்க, அவர்களது ஆக்ஷேபங்களுக்கு ஸமாதானங்கள் கூறாமலும், தமது கொள்கைகளை விளக்கத் தமக்குத்தோன்றும் நியாயங்களைக் காட்டாமலும், தம் நெஞ்சிற்றோன்றியபடியெல்லாம் நம் பத்திராதிபரை இகழ்ந்து பேசுவது தமது கல்விக்கும் பெருமைக்கும் பொருத்தமுடையதாக

ஸ்ரீமான். வே. இராஜகோபாலையங்காரவர்கள் நினைத்தது வியப்பே. இவ்வித வாதநெறியை நம்நாட்டிலன்றிப் பிறநாடுகளிற்காண்ப தரிது. பிறரை இகழ்வதற்கும் விவாதவிஷயத்திற்கும் பொருத்தம் யாதோ விளங்கவில்லை. யானும் இவ்விதப்பிழைஇயற்றியுள்ளே னாயினும், பின்னர் என் அறியாமையை உணர்ந்து அதற்குவேண்டிய பரிஹாரங்களையும் இயற்றியுள்ளேன். என் அநுபவத்திற்றெரிந்த விஷயங்களைப் பிறருமறிந்து பயனடையக்கூடுமென்று நினைத்து ஈண்டு அவைகளை விளக்குவேன். பிறர் கூறுவது பிழையேயாயினும் அதை நாம் மரியாதையிற் பிறழாமல் அவர்களுக்கு அப்பிழைகளைத் தெரிவித்தால், அவர்களே தமதுபிழைகளையுணர்ந்து திருத்திக்கொள் வர். அவரை நாம் இகழ்ந்துகூறின், அவர்கள் கூறுவது பிழையே யாயினும், தாம் கூறியதையே ஸ்தாபிப்பதற்கு முயல்வரேயன்றி, ஒருகாலும் தமது பிழையை ஒப்புக்கொள்ள இசையார். இதனால், உண்மைவிளங்கவேண்டுமென்ற நமதுகருத்தும் பயனற்றதாய்விடும். நம் செந்தமிழ்ப்பத்திராதிபரும், இனி நாம் சொல்வதொன்றும் பிறர் செவியேறாதென்று நினைத்தோ, இவ்விதவாதநெறியைக் கைப்பற்றி யிருப்பவருடன் வாதிப்பது வீணென்று நினைத்தோ, அல்லது இவ் வித இகழ்ச்சிமொழிகளால் தம் மனம் புண்பட்டோ, தாம் எழுதி வந்த 'வஞ்சிமாநகராராய்ச்சி' என்ற கல்விக்களஞ்சியநூலை முற்றுப் பெறச்செய்யாது விடுத்தனர். இவ்வாராய்ச்சியில் உண்மைவிளக்கி முடிவுரை கூறவேண்டுமானால் அவரைப்போன்றவர்களே முன்வர வேண்டுமாதலாலும், இவ்வளவில் ஸ்ரீமான். வே. இராஜகோபாலையங் காரவர்களே தாம்நடந்துகொண்டது பிழையேயென்றறிந்து வருந்து கின்றாரென எனக்குத்தோற்றுவதாலும், இனி நம் தமிழ்நாட்டில் இவ்வித ஆராய்ச்சியில் விவாதநெறிபிறழாமலே யாவரும் அரிய ஆராய்ச்சிகளை யெழுதுவரென யான் நம்புவதாலும், நம் செந்தமிழ்ப் பத்திராதிபரை இப்பிழையைப்பொறுத்துத் தம்நூலைமீண்டும் எழுதி முடிக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்வதில் செந்தமிழபிமானிக ளெல்லாம் உடன்படுவாரெனநினைந்து அவரை விநயத்துடன் அவ்வா றருள வேண்டிக்கொள்கிறேன்.

கே. ஜி. சங்கரையர்,
[ஹைக்கோர்ட்டு வக்கீல், திருவனந்தபுரம்.]

## * மங்களவாழ்த்து.

வடபா லிமயமுந் தென்பாற் பொதியமு
மெனவிசை பெறுமிவ் விருபெரு வரையுட்
டண்மலர் பொதுளிய சண்பகப் பொதும்பரும்
விண்வரை நிவந்த விரைமலர்க் கொன்றையுங்
கொங்கவிழ் நறுமலர்க் குங்குமத் தாருவு
மெங்கணுங் குளிர்தரு மெழிற்சுர புன்னையுஞ்
சந்தமு மகிலுந் தாரமுஞ் செறிந்து
மந்த மாருத மணங்கமழ் பொதியத்
தடவரைப் பிறந்து தமிழ்மூ வேந்தருட்
பாண்டியர் தம்பாற் பல்பகல் வளர்வுற்
றீண்டு வையை யினிற்றவழ்ந் தன்னோர்
சங்கத் திருந்த தமிழ்மக ளொருபோ
திங்குல கத்தோ ரெவருமன் னியர்போற்
போற்று திருப்ப வேற்றமில் சிலநாட்
குன்றிய செயலை நன்று தெரிந்து
ஞாலத் தவர்க்கொரு நற்று மென்னப்
பாலவ னத்தப் பதிபுரந் துயர்ந்தோன்
றாண்டெழு பரித்தேர்ச் சுடரவன் சுதனோர்
பாண்டித் துரைப்பெயர்ப் பார்புகழ் வள்ளல்
அம்மக வதனைச் செம்மனத் துடனே
வாழ்த்தி யெடுத்துளம் வாடா வகையிக்
கூடற் பதியிற் பீடுறு சங்கமொன்
றாக்கி யிருத்திட வகமகிழ்ந் துறைநாட்
செந்தமிழ் நாட்டின் றீவினைப் பயனாற்

---

* இது, மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் பதினோராம்வருடக்கொண் டாட்டத்தன்று திருவனந்தபுரம் சமஸ்தானம் ஹைகோர்ட்டு ஜட்ஜ் ஸ்ரீமாந். கே. ஜி. சேஷையரவர்கள் B. A., B. L., M. R. A. S. ஸபா நாயகராக வீற்றிருக்க, ஷை சங்கம் செந்தமிழ் உதவிப்பத்திராதிபர் அ. நல்லசிவன்பிள்ளை பாடியது.

பைந்தமிழ்ப் பாவலர் பரிதபித் திரங்க
ஆண்டீ ரைந்திலத் தாதையை யந்தத்
தமிழ்மக விழந்து தனிப்பட ருழந்தினி
யென்னே புரிவலென் றேக்கறு போழ்திற்
றளர்ந்தோர்க் குதவுந் தமிழ்ப்பெரு வேந்தன்
சேது காவலன் செம்பிநாட் டதிபன்
வையையந் துறைவன் மாமண்ட லாதிபன்
முல்லையந் தாரான் முகவைவயர் கோமான்
தொல்காப் பியமும் பல்காப் பியமுங்
கற்றோர் கூட்டுணச் சொற்றெறு மதுரம்
பொழியும் பாப்பல புகன்றிடும் பூபன்
பாற்கர மன்றரு நாற்கவி ராசன்
தராதலம் புகழும் இராஜரா ஜேஸ்வர
சேது பதியென மேதினி துதிக்கும்
எம்மனன் முன்வந் தெழிற் கரம்பற்றி
நாயக னாகி நனிமகிழ் விக்கும்
பெருமையும், வண்மைக் கொருவனென் றுலகோர்
போற்றித் துதிக்கு மேற்றமிக் குள்ளோன்
வானடு போற்றுங் கானடு காத்தா
னென்னும் பதியி லினிதுதித் தியார்க்கும்
வேண்டிய தளிக்கு மேதகு குணத்தான்
அறஞ்சிறந் தோங்கும் ஆண்டி பட்டி
ஜமீந்தா ராகித் தாரணி புரக்கும்
பெத்தாச் சிப்பெயர்ப் பிரபுவின் றுணையு
மொருங்குற்று வாழ்நா ளொருபதி னேழாம்
வருடத் திருநாண் மாண்புமிக் கோங்க
மும்மனர் தம்பின் முதன்மைபெற் றுயர்ந்து
செம்மையின் மும்மைச் செகமுழு தாண்ட
சிலைக்கொடி யுயரிய சேரலர் மருமான்
போர்தையந் தாரான் புரவலர் பெருமான்
ராம வர்ம நரேந்திரன் றனது
மன்னவை யதனிற் செந்நெறி பிறழாது

திருந்தறத் தவிசிற் சேர்ந்துநன் னீதி
பொருந்த வுரைக்கும் புகழ்ப்பெருஞ் செல்வன்
பன்னூ லுணர்பெரும் பண்டித னிவனென
முன்னோ ராய்ந்து மொழிந்திடப் பெற்ற
சேஷ நாமன் பூசுரர் திலகன்
அக்கிரா சனத்தி லமர்ந்தன னறிவின்
மிக்கோ ரனைவரும் வேந்தருஞ் செல்வரு
மிந்திரன் பேரவை யெய்திய புலவரின்
வந்தொருங் கீண்டினர் மன்னுமித் திருநாள்
செகதல மகிழச் சிறந்தது மன்னோ
தண்டமிழ்ச் சபையுமிச் சபையின் றலைவரும்
செந்தமிழ்ச் செல்வச் சேது வேந்தரும்
நந்தமிழ்க் குதவு நல்லோர் பலரும்
வூழி யூழி யுயர்ந்து
வாழி வாழி வளம்பல சிறந்தே.

---

நேரிசை வெண்பா.

மண்டு கொடும்போரின் மாமண்ட லீகர்வந்து
தெண்டனிடும் வெற்றித் திறம்படைத்துத்—தெண்டிரைசூழ்
வைய மெலாம்ஜார்ஜு மன்னர்பிரா னாணைசெலச்
செய்க விறைவன் சிறந்து.

---

## * மங்களவாழ்த்து.

---

தண்ணம்பிறைமுடித்ததாணுவுமைமுந்நான்கு
கண்ணனிவர்மூவர்காதலுடன்—நண்ணுமர
சாட்சிசெய்துமேன்மையடைந்தமதுரைத்தமிழின்
மாட்சிசொலபாரேவலார். (1)

---

* இது, மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் பதினேழாம்வருடக்கொண்டாட்டத்தில் ஆண்டிபட்டி சமஸ்தானவித்வான், வி. தீநஞானசம்பந்தக்கவிராயரவர்கள், பாடியது.

இன்பப்பொருள்கொண்டிறைவனைத்தா
 திலைத்துப்புனலினெதிர்த்தேறி
யெம்மானவன்பொற்கனற்கனுயர்ந்
 தேற்றம்படைத்ததமிழ்க்குழவி
அன்பிற்குரியசெழியர்குலத்
 தழகுபடைத்துவளர்ந்திடையே
அறியாவகையினிருப்பவதற்
 காக்கம்பெருக்கிவாழ்வளிக்க
முன்பிற்சிறந்தசேதுகுல
 முளைத்துப்பாண்டித்துரையென்ன
முறைசேர்செழியர்இனப்பெயரை
 முன்னோர்தவத்தாற்படைத்தபிரான்
தன்பற்பலசீரிலங்கிநிதந்
 தழைக்கப்பாற்கரேந்திரனார்
தனந்தந்தருள்வீடெனும்நான்காஞ்
 சங்கத்திருத்திமகிழ்ந்ததன்பின் (2)

தூயோர்புகழும்பாற்கரவேள்
 சுதனும்ராஜராஜேசன்
தோன்றுங்கருணைக்கிருப்பிடமாய்த்
 துங்கக்கவிஞர்தவப்பயனாய்
நேயார்தருமஜயமுயர்த்தி
 நிலத்தார்களிக்கமனங்களிக்கும்
நிருபன்உரமன்பெத்தாச்சி
 நேர்ந்ததுணைகொண்டினிதடைந்து
மீயார்தருபாண்டித்துரைதன்
 மேலாம்மனம்போனடந்தவர்பால்
விளையன்பதனைத்தன்செயலால்
 விளக்குமுயற்சிமிகப்படைத்தோன்
சேயானவன்மாமன்றனது
 செந்தாமரைத்தாள்தினந்துதிக்கும்
சீமான்சீனிவாசனது
 சீர்சேர்த்தினிதேதிகழ்தருநாள் (3)

துய்யபதினேழாகத்தோன்றுவருடோற்சவத்தைச்
செய்யகலையிற்சேஷன்றீரனென—வையமெலாம்
கூறுமொழிமனத்துட்கொண்டவன்றன்முன்னிலையில்
வீறுபெறக்கண்டானவ்வேந்து. (4)

கம்பனெனுஞ்சாமிநாதக்கலைஞன்முதற்
பம்புபெரும்புகழ்சேர்பண்டிதரும்—நம்பினரை
ஆதரிக்குமக்ராசனதிபருஞ்ஜார்ஜரசும்
நீதியுடன்வாழ்கதமிழ்நேர்ந்து. (5)

---

## * மங்களவாழ்த்து.

---

மீன்காய வெயில்விரிக்கு மணித்தடஞ்சூழ் தென்கூடல்
மேவப் பெற்ற
நான்காய தமிழ்ச்சங்கப் பதினேழாம் வருடவிழா
நாத னாகித்
தேன்காயும் படியினிக்கும் பிரசங்க மழைபொழிந்து
சிறப்புற் றானல்
மான்காயும் விழிக்கலைமா னிகர் கே. ஜி. சேஷையரா
மதியிக் கோனே. (1)

மெய்யறிவுச் சட்சிகளும் வியன்கலைக்கட் டருநீதி
விளக்குஞ் செங்கோற்
கையர்மதி கவர்னருமெக் காணுமதி மதிப்பாகக்
கருத லாலே
துய்யபுகழ்ச் சேஷையனீ திருவாங்கூ ருயர்நீதித்
துரையே யானாய்
ஐயவின்று தமிழ்ச்சங்கத் தலைமையுற்றாய் நின்புகழ்போ
லார்பெற் றாரே. (2)

---

* இது, மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் பதினேழாம் வருடோற்சவக்கொண்டாட்ட தினமாகிய (4—8—18)ல் சோதகுடி சாஹிப் பஹதூர் எம். கே. எம். அப்துல்காதிறு ராவுத்தர் அவர்கள் பாடியது.

மன்னரசர் புகழுமுத்து ராமலிங்க சேதுபதி
 மாலுஞ்சேரன்
கண்ணகன்ற ஞாலமுயர் நீதிதுரை சேஷையரும்
 களிமீக் கூர்ந்து
பண்ணுநித்ய நைமித்ய சபைத்தலைமையுறச்சங்கம்
 பரிக்கு மாண்பை
விண்ணுலகத் தவரறிந்தாற் றம்வாழ்வை யொருநாளும்
 விழைந்தி டாரே. (3)

ஒங்கும்விண்ணிற் பெரும்புலவர் சங்கத்தை யிந்திரனோ
 டுபேந்தி ரன்றான்
றாங்குதல்போ லிம்மதுரைப் புலவர்தமிழ்ச் சங்கத்தைத்
 தனக்கொப் பில்லாப்
பாங்குபெறு முகவைமுத்து ராமலிங்கப் பேர்ச்சேது
 பதியொ டன்பால்
ஈங்குவந்து தாங்குகின்றான் பெத்தாச்சிப் பெயர்ப்பெரியோ
 னிவனும் வாழி! (4)

## *மங்களவாழ்த்து.

பாமருவும் பாரதிக்கோ ருறையிடமாப்
 பனித்தசெழும் பதுமத் தார்ந்த
மாமருவும் திருமகட்கோர் திருமுகமாய்
 வனேந்தென்றும் மருவுந் தூய
காமருவும் உயர்மதுரைப் பதிவதியும்
 கனதிமிகும் கவினுற் சங்கம்
கோமருவும் பானருளா லென்ஞான்றும்
 வாழ்கவெனக் கூறு வோமே.

வெண்பா.

காற்சங்கமும்இங்கே நாடும் சபையினரும்
பாற்சங்க மேந்து பவனேநிகர்த்—தேற்றமிகும்
எங்கோன்பெத் தாச்சி இறைவன் றனதுதிருச்
செங்கோலும் வாழ்கவினி தே.

* இது, மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் பதினேழாவது வருடக்கொண்டாட்டத்தன்று சிவகங்கை வித்வான், வே. பெரியசாமிசேர்வை அவர்கள்; பாடியது.

உ

சிவமயம்.

# சேக்கிழார்வாக்கு

அறிவான்மிக்க பெரியோர்காள்!

சென்னை யூனிவர்சிட்டி பாடசாலை (School final) முடிவுப்பரிக்ஷைக்கு 1918-19ஆமாண்டிற்கு ஏற்பட்டிருக்கும் (Tamil text) தமிழ்ப் பாட புத்தகத்தில் தொண்டர்சீர்பரவுவாராகிய ஸ்ரீமத் சேக்கிழார் பெருமான்றிருவாக்காகிய பெரியபுராணத்தில் இளையான்குடிமாற நாயனார் சரித்திரங் கூறப்பட்டுள்ளது. அத்தமிழ்ப் (Tamil text) பாட புத்தகத்திற்கு (Notes) உரையெழுதப்புகுந்த S. கிருஷ்ணமாச்சாரியாரவர்கள் (Retired Head Tamil Pandit Wesley College Rayapetah) இலக்கணவிலக்கியவாராய்ச்சி மிக்குடையாரென்பது யாவருமுணர்ந்ததே. அவர்களாலெழுதப்பட்ட, ஷை உரைப்புத்தகம் பெரியபுராண நூலாசிரியர் சேக்கிழார் வரலாறு 18-வது பக்கத்தில் அநபாயசோழன்கூற்றாக "இச்சரித்திரம் யாவர்க்குந் தெளிவாக் விளங்குதற்பொருட்டு இலக்கணவிதிப்படியமைந்த பெருங்காப்பியமாக விரித்துச்செய்து தாருமென்றான்." என்று கூறப்பட்டுள்ளதை யெடுத்தெழுதிய ஐயங்காரவர்கள் ஷை (Tamil Text) தமிழ்ப்பாட புத்தகத்தில்

"அன்பனே அன்பர்பூசையளித்தநீயணங்கினோடு
மென்பெருமுலகமெய்திபிருநிதிக்கிழவன்றானே
முன்பெருநிதியமேந்திமொழிவழியேவல்கேட்ப
வின்பமார்ந்திருப்பீராமென் றருள்செய்தானெவர்க்குமிக்கான்"

என்னும் 26-வது செய்யுளுக்கு உரையெழுதப்புகுந்து உரைப்புத்தகம் 37-வது பக்கத்தில் "'இன்பமார்ந்திருக்கவென்றேயருள்செய்தான்' என்று மூலத்தைத் திருத்துக. 'இன்பமார்ந்திருப்பீராமென்று'

என்று காணப்படுகின்ற பாடம் 'அன்பர் பூசையளித்த நீ இன்பமார்ந் திருப்பீர்' என்று இயைந்து ஒருமையெழுவாயும் பன்மைப்பயனிலையு மாக முடிதலால் ஒருமைப்பன்மை வழுவிற்கு இடமாதலறிக. 'அன்பர் பூசையளித்தநீர் என்றிருப்பினுமாம்" என்றெழுதியிருக்கின்றார்கள்.

"மதுரவிராமாயணகதையுரைசெய்தவான்மிகபகவனுமொப்பல்ல
விதிவழிபாரதமுரைசெய்துகரைசெய்தவேதவியாசனுமொப்பல்ல
சிதைவரலாயிரநாவுடனறிவுளசேடவிசேடனுமொப்பல்ல [பார்."
பொதியமலைக்குறுமுனிவனுமொப்பலபுகழ்புனைகுன்றைமுனிக்கென்

என்ற பெரியார்வாக்குக் கிணங்கவும்

"அடியார்பெருமையுமருமையுநாளுமறியம்பலவாணர், அவர்வர லாறு விரித்துரைசெய்பவர் யாரெனவுட்கருதிக், கடியார் மற்றவ ரன்பத்தனையுங் கண்காண்படிசெய்து காமறு முதலுமெடுத்தருளின ரிக், கடல்சூழ்புவி யிடையிப்படி யார்பெற்றாரித், தமிழ்மான்மிய மெய் பாடைகளுக்குளீது" என்றபடியும் தைவிகவாக்காய் அநபாயசோழ ராலும் பௌஷ்கராகமவிர்த்திசெய்த ஸ்ரீமத் உமாபதிசிவாச்சாரியர் முதலிய பலபிரபல ஆன்றோர்களாலுஞ் சிரோரத்தினமாக் கோடற்பால தாந் தொண்டர்புராணமென்னும் பெரியபுராணத்திற்கு எவர்க்கு மெட்டா விலக்கணப்பிழை இவர்க்கெட்டியது வியப்பே. ஐயங்காரவர் கள் தமது உரைப்புத்தகம் 19-வது பக்கத்தில் (சேக்கிழார்) காலம்:— என்றெடுத்துக்கொண்டு "இவர் அநபாயசோழன்காலத்தில் அவ னுக்கு மந்திரியாயிருந்து.........இந்தப் பெரியபுராணத்தைப் பாடின தாகக் கூறப்படுதலாலும்...............இவர்காலம் ஏறக்குறைய எண் ணூற் வருடங்களுக்கு முன்னெனன்பார்" என்றும் ஷை உரைப்புத்த கம் 41-வது பக்கத்திறுதியில் நன்னூலாசிரியர் வரலாற்றில் "அவர் காலம் இப்பொழுதைக்கு ஏறக்குறைய நானூற்றைம்பதுவருடங் களுக்கு முன்பென அறியப்படுகிறது" என்றுங் கூறியிருக்கின்றார்கள். எண்ணூறுவருடங்களுக்குமுற்றோன்றிய பெரியபுராணத்திற்கு

முந்நூற்றைம்பது வருடஞ்சென்று பிற்றோன்றிய நன்னூல் எவ்வாறு இலக்கணமாகுமென்றுந் தெரியாதவர்களல்ல. சொற்பொருள்சம்பிரதாயக் களஞ்சியமாயுள்ள ஐயங்காரவர்கள் பெரியபுராணத்திற்குத் "துங்கமிகுந்த வருந்தவமேவிய தோலா நாத்திரண தூமாக்கினியருள் தொல்காப்பியமே தோன்றுமிலக்கணம்" என்ற சேக்கிழார்பிள்ளைத் தமிழையும் பார்த்திருக்கலாம். ஆதலில் தொல்காப்பியம் சொல்லதிகாரம் "முன்னிலை சுட்டிய ஒருமைக்கிளவி, பன்மையொடு முடியினும் வரை நிலையின்றே, ஆற்றுப்படை மருங்கிற்போற்றல் வேண்டும்" என்னும் 462-ம் சூத்திரத்தையும் அதற்குச் சேனாவரையர் செய்துள்ள உரையையும் நன்காராய்ந்துள்ள ஐயங்காரவர்கள் (Text Notes) பாடபுத்தக உரையெழுதுங்காலத்து இச்சூத்திரத்தை மறதிக்கள்வன்வாரிக்கொண்டனன் போலும். ஐயங்காரவர்களது உரைகொண்டொருஞ் மாணவர்களும், ஆசாரியர்களும் மூலபாடத்தை யெவ்வகையானுந் திருத்தாது மேற்காட்டிய சூத்திரப்படி ஒருமைவழுவாய்க்குப் பன்மைப் பயனிலை கோடற் கூடுமென்றுகொண்டு அவர்களது உரைப் புத்தகத்தைத் திருத்திக்கொள்ளும்படி இப்பத்திரிகை மூலமாய்க்கேட்டுக் கொள்கிறேன்.

சி. குருசாமி.

---

## பிழைதிருத்தம்.

---

"செந்தமிழ்"த் தொகுதி கசு-பகுதி கூ-ல் சங்கூ-ம் பக்கம் கஉ-வது வரியில் முடிவில் என்பதற்குப்பின் சோதகுடி சாஹிப் பஹதூர் எம். கே. எம். அப்துல்காதிறு ராவுத்தரவர்கள்பாடிய மங்களவாழ்த்தும் என்று சேர்த்துப்படித்துக்கொள்க.

கடவுள்துணை.

# மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் சாசுவத அக்கிராசனாதிபதிகளாகிய மாட்சிமைதங்கிய இராஜராஜேச்வர முத்துராமலிங்கஸேதுபதியவர்களது மூன்றாம் தேவியார் தேகவியோகத்தை நினைந்து மதுரைத் தமிழ்ச்சங்கத்தார் பாடிய இரங்கற்பாக்கள்.*

---

ஈந்திரப்போர் தமைப்புரப்போ னம்மதுரைத் தமிழ்ச்சங்கத்
திறைவ னாகி
ஆர்ந்தபல நலனடைய வளித்துவப்போன் தென்முகவை
யரச ரேறாஞ்
சாந்தகுணன் புகழாளன் ராஜரா ஜேஸ்வரமால்
தனக் குகந்த
பூந்தவிசிற் றிருநிகர்மூன் றாநாச்சி யார்விண்ணம்
புகுதல் கேட்டேம்.

வையமெலா நனியிரங்க மாமதுரைத் தமிழ்ச்சங்க
மன்றத் தின்று
செய்யமனு முறைதவறா நம்மிறைவற் கித்துயரம்
சேரற் பாற்றோ
ஐயவென வுளந்தளர்ந்தே மூழ்வினையின் வலியெனவே
யறிந் தயர்ந்தே
நையுமனத் தினமாகி யாங்களெலா மறுதாப
நண்ணி னேமால்.

பொல்லாதார் நன்மையினைப் பொருந்துவதும் புனிதமிகப்
பொருந்தி வாழும்
நல்லார்துன் புறுவதுமூழ் வயத்தாலென் பாரவையன்
னவர்பா லென்றும்
நில்லாவென் பதுசரதம் நம்மிறைவ னித்துயரி
னீங்கி யெல்லாம்
வல்லான்ற னருளானல் வாழ்வடைவா னவன்றானை
வணங்கு வாமே.

---

* இவை செந்தமிழ்தவிப் பத்திராதிபர் சு. நல்லசிவன்பிள்ளையாலியற்றப் பெற்றன.

# 1918-௵ ஆகஸ்டு௴ 5௳ திங்கட்கிழமை மதுரை விக்டோரியா எட்வர்டு ஹால் கட்டிடத்திற் கூடிய மதுரைத் தமிழ்ச்சங்க மகா சபையோரால் ஆலோசித்துத் தீர்மானிக்கப் பெற்ற விஷய விவரக்குறிப்பு.

———:o:———

அடியிற்கண்ட முப்பத்தொருவர் (31-பேர்) அங்கத்தினர்கள் வந்திருந்தார்கள்.

1. மகா-௱-௱-ஸ்ரீ Justice K. G. சேஷையரவர்கள் B.A., B.L. M.R.A.S. சங்கவருஷோத்ஸவ அக்கிராசனாதிபதி.
2. ,, S. Rm. M. Ct. பெத்தாச்சி செட்டியாரவர்கள் M.R.A.S. சங்கத்தின் சாசுவத உபஅக்கிராசனாதிபதி.
3. ,, மஹாமஹோபாத்யாய வே. சாமிநாதையரவர்கள்,
4. ,, K. G. சங்கரையரவர்கள், B.A., B.L.
5. ,, T. V. ஸ்ரீநிவாஸராகவாசாரி அவர்கள், B.A.,
6. ,, T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள், B.A., B.L.
7. ,, T. N. சுந்தரராஜையங்காரவர்கள், B.A., B.L.
8. ,, V. S. இராமஸ்வாமி சாஸ்திரியவர்கள் B.A., B.L.
9. ,, வேணுகோபாலையங்காரவர்கள்.
10. ,, ராவ்பகதூர். P. சுப்பராயஐயரவர்கள், B.A.,
11. ,, V. சிவஞானயோகி அவர்கள்,
12. ,, பொ. முத்தையபிள்ளை அவர்கள்,
13. ,, மு. ரா. அருணாசலக்கவிராயரவர்கள்,
14. ,, R. கணபதிஐயரவர்கள், B.A., B.L.
15. ,, மு. சாம்பசிவநாயனார் அவர்கள்,
16. ,, திரு. நாராயணையங்காரவர்கள்.
17. ,, D. சுந்தரராஜையங்காரவர்கள்,
18. ,, S. கோபாலசாமிஐயங்காரவர்கள், B.A.,
19. ,, சையத் மகம்மது ஆலிம்புலவரவர்கள்,
20. ,, V. முத்துசாமிஐயரவர்கள், M.A., L.T.
21. ,, P. K. ஸ்ரீநிவாஸாசாரியரவர்கள்,
22. ,, M. K. M. அப்துல்காதிறு ராவுத்தரவர்கள்,
23. ,, ம. கோபாலகிருஷ்ணையரவர்கள்,
24. ,, ராம. பழனிவேற் பிள்ளையவர்கள்,

25. ,, ஆ. கார்மேகக்கோனார் அவர்கள்.
26. ,, கா. நல்லைய ஆசாரி அவர்கள்,
27. ,, ரா. சுப்பிரமணியக்கவிராயரவர்கள்,
28. ,, T. சுதர்சனாச்சாரியாரவர்கள்,
29. ,, N. V. சுந்தரராஜையரவர்கள், B.A., L.T.
30. ,, N. R. சுப்பிரமணியசர்மா அவர்கள்,
31. ,, P. சிதம்பரபுன்னைவனநாதன் அவர்கள்.

## தீர்மானங்கள்:—

I. யாழ்ப்பாணம் இராமநாதன் காலேஜில் படிக்கும் பெண்களுக்கு, அக்கலாசாலையில் கற்பிக்கும் தமிழ்நூல்களில் ஓர் பரீக்ஷை நடத்தவேண்டுவதாய் ஷை கலாசாலைத்தலைவர் மகா-ள-ள-ஸ்ரீ Hon'ble P. இராமநாதன் அவர்கள், கேட்டுக்கொண்டபடி அங்கீகரிக்கலாயிற்று.

II. ஆங்கில கலாசாலை மாணவர்களுக்காக நடத்தும் பரீக்ஷை சம்பந்தமான 6-வது விதியில் 'போகிறவர்களாயும்' என்பதற்குப்பதிலாக 'போகக்கூடியவர்களாயும்' என்று மாற்றவேண்டுவதாய்த் தீர்மானிக்கலாயிற்று.

III. காலஞ்சென்ற மு.ரா. கந்தசாமிக்கவிராயரவர்கள் ஸ்தானத்திற்கு வித்யா விஷய ஆலோசனை சபையில் மகா-ள-ள-ஸ்ரீ V. முத்துசாமி ஐயரவர்களை நியமித்திருப்பதாகத் தீர்மானிக்கலாயிற்று.

IV. பன்னூற்றிரட்டுப் புத்தகத்தை சங்கத்தில் மறுபடியும் அச்சிட ஏற்படும் செலவிற்கு ஸ்ரீமான். பெத்தாச்சி செட்டியாரவர்கள், பொருளுதவி செய்வதாக அன்புடன் வாக்களித்தது சபையோரால்-உவந்து அங்கீகரிக்கப்பட்டது.

மதுரைத் தமிழ்ச்சங்கம்,
5—8—1918.

S. Rm. M. Ct. Pethachi,
உப அக்கிராசனாதிபதி.

---

மாட்சிமை தங்கிய கிராந்த அக்கிராசனாதிபதியவர்களுக்கு இப்போது நேர்ந்துள்ள துக்க சம்பவத்தைக்குறித்து சங்கத்தார் அநுதாபத்தை இதனுடன் சேர்த்திருக்கிற இரங்கற்பாக்களால் தெரிவிக்கிறார்கள். இவ்வருஷக் கூட்டம் மூன்றுநாள் நடத்துவதாய் ஏற்பட்டிருந்ததில் மேலேகண்ட அசந்துஷ்டியால் இரண்டு நாளோடு முடித்து மூன்றாநாள் விடுமுறை நாளாக்கப்பட்டது.

மதுரைத் தமிழ்ச்சங்கம்,
5—8—1918.

K. G. Seshaiyar,
வருஷோத்ஸவ அக்கிராசனாதிபதி.

---

## 1918-ஆ செப்டம்பர்மீ 3உ காலை 9-மணிக்குக்கூடிய மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் காரியநிர்வாக சபையில் முடிவுசெய்யப்பட்ட தீர்மானங்களின் விவரம்.

—:o:—

1. மாட்சிமைதங்கிய கனம் B. இராஜராஜேசுவர ஸேதுபதிமன்னரவர்கள் —அக்கிராஸனாதிபதி,
2. மகா-ள-ள-ஸ்ரீ. Hon'ble K. இராமையங்காரவர்கள், B. A. B. L.,
3. ,, வித்துவான் R. இராகவையங்காரவர்கள்.
4. ,, V. S. இராமசாமிசாஸ்திரியவர்கள் B. A., B. L.
5. ,, M. கோபாலகிருஷ்ணையரவர்கள்.
6. ,, T. C. ஸ்ரீநிவாசையங்காரவர்கள் B. A., B. L.
7. ,, T. சுதர்சனாச்சாரியர் அவர்கள்.

இவர்கள் வந்திருந்தார்கள்.

தீர்மானங்கள்:—

I. 1918-ஆ ஜூன், ஜூலை, ஆகஸ்டுமாதங்களின் வரவுசெலவுகணக்குகள் அங்கீகரிக்கலாயிற்று.

II. மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் அங்கத்தினராகவேண்டுமெனக் கோரிய அடியிற்குறித்துள்ளவர்களை அங்கத்தினராக அங்கீகரிக்கலாயிற்று.

1. மகா-ள-ள-ஸ்ரீ P. M. சோமசுந்தரம்பிள்ளை அவர்கள், M.A. L.T. Lecturer in Natural Science, அமெரிக்கன் காலேஜ், மதுரை.
2. ,, V. R. ஹரிஹரையரவர்கள், B. A. L. T., தலைமையுபாத்தியாயர், ஹைஸ்கூல், கோபாலசமுத்திரம்.
3. ,, S. R. பிரமநாதவேளாளர் அவர்கள், திருநாவுக்கரசு வித்தியாசாலைத்தலைவர், மஞ்சள்வயல், மறவக்காடு போஸ்டு, தஞ்சாவூர் ஜில்லா.

III. கலாசாலை மாணவர்களின் போஷணைக்காக அடியிற்கண்ட கனவான்கள் மாதச்சந்தா அன்புடன் உதவிபுரிவதற்குச் சங்கத்தார் நன்றி பாராட்டி வந்தன மளிக்கிறார்கள்.

1. மாட்சிமைதங்கிய கனம் B. இராஜராஜேசுவர ஸேதுபதிமன்னரவர்கள்,
2. மகா-ள-ள-ஸ்ரீ S. Rm. M. Ct. பெத்தாச்சிசெட்டியாரவர்கள், M.R.A.S. ஆண்டிபட்டி ஜமீந்தார்.

3. ,, தக்ஷிணாமூர்த்திதுரைராஜா அவர்கள், B.A. B.L.
ஹைகோர்ட்டு வக்கீல், மதுரை.

4. ,, T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள். B. A. B.'L.,
ஹைகோர்ட்டு வக்கீல், மதுரை.

5. ,, ராம. மெ. சித. வைரவன்செட்டியார் அவர்கள்,
தேவகோட்டை.

IV. சங்கத்தின் உப அக்கிராசனாதிபதியாகிய ஆண்டிபட்டி ஜமீந்தார் மகா-ள-ள-ஸ்ரீ சா. ராம. மு. சித. பெத்தாச்சி செட்டியாரவர்கள், 'பன்னூற்றிரட்டு' மூன்றாம் பதிப்பு, சங்கத்தில் அச்சிடும் விஷயமாக நேரிடும் செலவைத்தான் ஏற்றுக்கொள்வதாக அன்புடன் வாக்களித்திருப்பதற்குச் சங்கத்தார் நன்றிபாராட்டி வந்தன மளிக்கிறார்கள்.

V. சென்னையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள ஆந்திரபாஷாபிவிருத்தி சங்கத்தின் பிரசுரங்களை ஷை சங்கத்தார் மதுரைத்தமிழ்ச்சங்கத்திற்கு அன்புடன் இனாமாக அளித்திருப்பதற்காக, மதுரைத்தமிழ்ச்சங்கத்தார் வந்தனம் கூறி அதனை ரிக்கார்டில் பதிவு செய்தார்கள். ஷை ஆந்திரபாஷாபிவிருத்தி சங்கத்திற்கு இனாமாக அளிக்கப்பட்ட சங்கப்பதிப்புப் புத்தகங்களை சங்கக்கணக்கில், செலவு போடும்படிக்கும் தீர்மானித்தார்கள்.

VI. சங்கப் பரீக்ஷைகளில் மாணவர்கள் பெற்ற அம்சங்களைக் குறித்தனுப்பும்படி எழுதிக் கேட்டுக்கொண்ட மாணவர்கட்கு அம்சங்களைக் குறித்தனுப்பும்படி தீர்மானிக்கலாயிற்று.

VII. (1) 1918-19-ம் ஸூலத்திற்குத் தயாரித்த பட்ஜெட் அடுத்த மீட்டிங்கிற்குத் தள்ளிவைக்கப் பட்டிருக்கிறது.

(2) திருவண்ணாமலை, பரீக்ஷாஸ்தலங்களில்ஒன்றாக ஏற்படுத்தப் பட்டதை அங்கீகரிக்கலாயிற்று.

(3) மாட்சிமைதங்கிய இராஜராஜேஸ்வர முத்துராமலிங்க ஸேதுபதி அவர்களது மூன்றாம் தேவியார் தேகவியோகத்தை நினைந்து மதுரைத் தமிழ்ச்சங்கத்தார் பாடிய "இரங்கற்பாக்கள்" மனதிற்கு ஆறுதலைச் செய்வதாக எழுதிய கனம் ஸேதுபதியவர்களது 26—8—18உ கடிதம் ரிக்கார்டில் வைக்கலாயிற்று.

B. இராஜராஜேஸ்வர ஸேதுபதி,
அக்கிராஸனாதிபதி.

---

(True copy)

*Joint Secretary.*